OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை (23 04 1995) UTHAYAN [A Lively National Tami lDaily] கதிர் 146

# கட்டுமுறிவு ராணுவ முகாம் முற்றாக அழிப்பு!

# புலிகளின் தாக்குதலில் 40 சிப்பாய்கள் பலி!!

## பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப் 23

மட்டக்களப்பு மாவட்டம் கட்டு முறிவு ஸ்ரீலங்கா இராணுவ முகாமை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாகத் தாக்கி அழித்தனர். விடுதலைப் புலிகளின் இத்தாக்குதலின் போது 50க்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 40க்கு மேற்பட்ட சிப்பாய்கள் காயம் அடைந்தனர். பெரும் தொகையான கனரக ஆயுத தளபாடங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டன.

கடந்த 19 ஆம் திகதி திருகோணமலையில் கடற்படைக்குச் சொந்தமான இரு பீரங்கிக் கப்பல்களை கடற்கரும்புலிகள் தகர்த்து அழித்த சம்பவத்தை அடுத்து தென் தமிழீழத்தில் இடம் பெற்ற பாரிய தாக்குதலாக கட்டு முறிவு ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தாக்குதல் கருதப் படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் வெள்ளிக்கிழமை இரவு 10. 50 மணி அளவில் ஆரம்பித்து ஏழு மணி நேரம் நீடித்தது. முகாம் முற்றாக அழிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இதே கட்டுமுறிவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் 30 நிமிட நேர பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். இதில் 25 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு இராணுவ தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தனர்.

கட்டுமுறிவு இராணுவ முகாம் மட்டக்களப்பின் ஆண்டாம்குளப் பிரதேசத்தில் உள்ளது. எஸ். ரி. எவ் எனப்படும் விசேட படையினருடைய பாரிய முகாமாக கட்டுமுறிவு விளங்கியது.

கதிரவெளி, வாகரை, பனிச்சங்கேணி, மாங்கேணி, திருகோணமடு, குவாட்டஸ் ஆகிய பலம் வாய்ந்த இராணுவ முகாம்களுக்கு மத்தியிலே உள்ள கட்டுமுறிவு முகாம் மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

(இ-6-14-5-4)

## சிப்பாய்கள் சிதறி காட்டுக்குள் தப்பி ஓடினர்

கட்டுமுறிவு ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 37 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற் போயினர் என்று பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

வெள்ளிக்கிழமை இரவு தாக்குதல் ஆரம்பமானபோது அந்த முகாமில் இருந்த ரிசேர்வ் மற்றும் கொமாண்டோப் படையினர் காட்டுப் பகுதிக்குள் சிதறி ஓடினர்.

விடுதலைப் புலிகள் ஒரு கட்டத்தில் அந்த ராணுவ முகாம் முழுவதையும் கைப்பற்றி இருந்தனர் புலிகளின் கடும் தாக்குதல் ராணுவத்துக்கு பலத்த அடியாக அமைந்தது என்றும் பி. பி. ஸி தெரிவித்தது.

சுமார் 300 பேர் கொண்ட விடுதலைப் புலிகள் அணி தாக்குதலை நடத்தியதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

(இ-ஐ)

## மேலதிக படையினர் வந்த ஹெலிமீதும் தாக்குதல்

கட்டுமுறிவு ஸ்ரீலங்கா ராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது படையினருக்கு உதவ மேலதிக துருப்புக்கள் முகாம் அமைந்திருந்த இடத்துக்கு ஹெலிக்கொப்டரில் அனுப்பப்பட்டன. இப்படிச்சென்ற ஹெலிக்கொப்டர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின. இதனால் முகாமுக்கு பல் மைல்கள் தொலைவிலேயே மேலதிக படையினரை ஹெலிகளில் இருந்து இறக்க முடிந்தது. இப்படி பி. பி ஸி. தெரிவித்தது.

ஹெலிகளில் இருந்து தரை இறக்கப்பட்ட மேலதிக படையினர் தாக்குதலுக்கு இலக்கான முகாமை அடைய நீண்ட நேரம் சென்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட 12 மணி நேரத்தின் பின்னரும் முகாமை நெருங்கிக் கொண்டிருந்த மேலதிக படையினரை எதிர்த்து இடைவழியில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மேலதிக துருப்புக்கள் முகாமை அடைவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் முகாமை தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து முகாமின் ஒருபகுதியை தீயிட்டு எரித்தனர் என்றும் பி. பி. ஸி தெரிவித்தது.

(இ-ஐ)

## 7 மணி நேரத்துக்கு மேல் நீடித்த கடும் சண்டை

கட்டுமுறிவு ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 7 மணி நேரத்துக்கு மேல் கடும் சண்டை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் இடம்பெற்ற சமயம் முகாமில் 160 இராணுவத்தினர் இருந்ததாகவும் காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் பொலன்னறுவை, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளுக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் றொக்கெட்டுக்கள், மோட்டார் குண்டுகளைப் பெருமளவில் பயன்படுத்தினர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## கொல்லப்பட்டோர் எண்ணிக்கை மேலும் அதிகம்

லண்டன், ஏப். 23

கட்டுமுறிவு ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 50 க்கும் அதிகமான இராணுவத்தினர் பலியாகி இருக்கலாம் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி பி. பி. ஸி. நேற்று நள்ளிரவு செய்தி வெளியிட்டது.

கட்டுமுறிவு தாக்குதல் சம்பவம் ஸ்ரீலங்கா இராணுவத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாக பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

(இ)

## தேர்தல் வாக்குறுதியை மீறி அரசு யுத்தத்தில் ஈடுபட முடியாது!

### விக்டர் ஐவன் பி. பி. ஸிக்கு பேட்டி

கொழும்பு, ஏப்ரல். 23

யுத்தத்துக்குப் பதிலாக இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்து பதவிக்குவந்த அரசு அந்த நோக்கத்தை கைவிட்டு மீண்டும் யுத்தத்தில் ஈடுபட முடியாது.

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் ''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

மீண்டும் நீண்ட நாள் யுத்தம் செய்ய இரு] தரப்பினருக்கும் இயலாது. தற்போதைய சர்வதேச நிலைமையில் அவ்வாறான யுத்தம் ஒன்றுக்கான வாய்ப்பு மட்டுப் படுத்தப் பட்டதாகும்.

கிழக்கில் தமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர் அரசு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.]

தற்போது விடுதலைப் புலிகள் கிழக்குப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவது தாங்கள் வட பகுதிக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவர்கள் அல்ல என்பதை காட்டத்தான் என்று தெரிகிறது.

இரு தரப்பினருக்கும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

இருதரப்பு தலைவர்களிடையேயும் நம்பகத் தன்மை ஏற்பட்ட பின்னரே ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட நாடுகள் பலவும் அதன் நோக்கத்தை அடைந்துள்ளன.

மீண்டும் சமாதான முயற்சிகள் ஏற்படவேண்டுமாயின் தலைவர்கள் மட்டத்தில் இரு சாராருக்கும் இடையே நம்பிக்கையின்மை நீக்கப் படவேண்டும்.

(இ-ஐ-6)

### குமண மீண்டும் பருத்தித்துறை வந்தது

வடமராட்சி, ஏப். 23

குமண கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி நேற்று மீண்டும் ஆரம்பமானது.

கடந்த வியாழக்கிழமை பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த சமயம் இக்கப்பல் இடைநடுவில் காங்கேசன் துறைமுகத்துக்கு திருப்பி அழைக்கப்பட்டது தெரிந்ததே.

இக்கப்பலில் அரைவாசி இறக்கப்படாத நிலையில் இருந்த பற்றரிகளை பறிமுதல் செய்துவிட்டு கப்பலை மீண்டும் அனுப்ப [illegible] படையினர் அனுமதித்தனர்.

(இ-173)

### மூச்சந்தி முரளி



வாக்குறுதிகளை காற்றில பறக்க விடுவது இவைகளுக்கு கைவந்த கலை பாருங்கோ ..!

### சந்திரிகா - ரணில் சந்திப்பு

கொழும்பு, ஏப். 23

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் சந்தித்து இன்றைய நிலை பற்றி ஆராய்ந்தனர்.

இச் சந்திப்பு நேற்று முன் தினம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் இடம் பெற்றது. (இ-5)

### தமிழ் வர்த்தகர் வீட்டில் 6 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஏப் 23

புத்தளம் பகுதியில் தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து சுமார் 6 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இராணுவச் சீருடையில் சென்ற கும்பல் ஒன்று இக் கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### பென்ரோச் பற்றரிகளுடன் இளைஞன் கைது

கொழும்பு, ஏப் 23

தாண்டிக்குளம் தடை முகாம் ஊடாக நேற்று முன் தினம் 570 பென்ரோச் பற்றரிகளை எடுத்துச் செல்லமுற்பட்ட நபர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த கந்தையா மோகனநாதன் (வயது 35) என்பவரே கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் வவுனியா பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-14)

### காயமடைந்த படையினர் இரத்தம் இன்றி அவதி

#### ரூபவாஹினி அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 23

பொலன்னறுவை, மற்றும் அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாக ரூபவாஹினி நேற்று மாலை செய்தி அறிவிக்கையில் தெரிவித்தது.

பொதுமக்கள் உடன் இரத்ததானம் செய்து உதவுமாறு அதில் கேட்கப்பட்டது.

கிழக்கில் இராணுவ முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களில் காயமடைந்த பெரும் எண்ணிக்கையிலான படையினர் பொலன்னறுவை, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டதை அடுத்தே இரத்தத்துக்கு அங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ)

### காங்கேசன்துறையிலும் தாக்குதல் நடத்த திட்டம்?

காங்கேசன்துறைப் பகுதியில் கடற்படையினருக்குச் சொந்தமான படகு ஒன்றைத் தகர்க்க விடுதலைப் புலிகள் எடுத்த முயற்சி கடற்படையினரால் முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நீருக்கு அடியால் ஊடுருவி கடற்படைக் கப்பல்களுக்கு சேதம் விளைவிக்க புலிகள் திட்டமிட்டிருந்ததாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-4-6)

### கிளாலி கடல் நீரேரி தடை குறித்து அறிவிப்பு

கிளாலி கடல் நீரேரியை தடை செய்யப்பட்ட பகுதியாக அரசு அறிவித்துள்ளது என்று ''த ஐலண்ட்'' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

கிளாலி கடல் நீரேரி ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் படகுப் போக்குவரத்து தடுக்கப்படும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டது. (ஐ-5)

### திருகோணமலையில் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

நேற்று முன் தினம் மாலை திருகோணமலையில் பொலிஸார் மீது நடத்திய தாக்குதலின்போது—

★ ரி - 56 ஒன்று ரக துப்பாக்கிகள் - 5

★ அதற்குரிய ரவைக் கூடுகள் - 7

★ நடுத்தர ரவைகள் - 210

★ ஏ.கே. ரவைக் கூட்டுத் தாக்கி அணி ஒன்று என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இத் தாக்குதலில் 6 பொலிஸார் கொல்லப்பட்டிருப்பதாக தற்போது அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-4)

### 2 கடற் கரும்புலிகளின் நினைவுக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஏப் 23

பாதுகாப்புக் கூடிய திருகோணமலைத் துறைமுகத்துக்குள் ஊடுருவி கடற்படையின் 2 பீரங்கி கப்பல்களை வெற்றிகரமாகத் தகர்த்து வீரச்சாவெய்திய 4 கடற்கரும் புலிகளில் இருவரின் நினைவுக் கற்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடுகை செய்யப்பட்டன.

அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற் கரும்புலி கப்டன் சாந்தாவின் நினைவுக்கல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும்—

சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற்கரும் புலி மேஜர் தணிகைமாறனின் நினைவுக்கல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் நடுகை செய்யப்பட்டன.

கடற் கரும்புலி கப்டன் சாந்தாவின் உருவப்படம் சுன்னாகம் நகரில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

பெரும் எண்ணிக்கையான

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் பங்களிப்பு இல்லாவிடினும் அரசு சமாதானத்தை நிலைநாட்டும்!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசாங்கம் சமாதானத்தை நிலை நாட்டியே தீரும்.

— ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் தொலைத் தொடர்பு சேவைகளை ஆரம்பித்து வைக்கும் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சமாதானத்தை நிலை நாட்டி அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

சமாதானத்துக்காக விடுதலைப்புலிகள் எந்த முயற்சியும் எடுக்கத் தயாரில்லை என்பது வெளிப்படையானது; எனவே தமிழ் மக்களின் உண்மையான சமாதான அபிலாஷைகளை அவர்கள் தொடர்ந்தும் பிரதிபலிக்க மாட்டார்கள்.

வெறும் வன்செயல்களின் மூலம் விடுதலைப்புலிகளால் அவர்களின் அபிலாஷைகளை அடக்கி விட முடியாது.

வட பகுதி மக்களுக்கும் தென் பகுதி மக்களுக்கும் தற்போது சமாதானம் தான் தேவைப்படுகிறது. இதனை மனதில் கொண்டு அந்த நோக்கத்தை அடைய நாம் செயற்படுவோம்.

— இவ்வாறு ஜனாதிபதி தமது உரையில் மேலும் தெரிவித்தார். (ஐ-5-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி வினாத்தாள்

[ விடைகளுடன் ]

ஆண்டு 3. 4. 5. 6. 7. 8 9. 10 O/L வகுப்புகளுக்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. 3ஆம் தொகுதி வினாத்தாள்களும் புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் புதிய பாடத்திட்டத்தின்படி 5ஆம் தொகுதியும் 23-04-95 ஞாயிறு வெளிவருகின்றன பிரபல கல்வி நிறுவனங்களிலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

**BOND**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (36238)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L DAY CLASSES**

[காலை 8-30 மணி முதல் பி. ப. 2 மணி வரை]

புதிய 4ஆம் பிரிவு

ஆரம்பம்: 24-4-1995
(திங்கள்) காலை 8-30 மணி.

★ எமது வழமையான தனித்துவம் மிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு

[சி-1001]



## விற்பனைக்கு

லொறிக்கு பாவித்த 8 பற்றறிகள் மேலும் பாவிக்க கூடிய நிலையிலும், குபாட்டா வான்மாஸ்ரர் உழவுயந்திரத்தின் புதிய கலப்பையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

பொது முகாமையாளர்,
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்.
374, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி-1069)



## G. S. Q. (புள்ளி விவரவியல்) டியூசன் தேவை


பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக G S. Q (புள்ளி விவரவியல், தூயகணிதம், பிரயோக கணிதம்) முதலாண்டு கற்கும் மாணவனுக்கு டியூசன் தேவை.
புள்ளி விவரவியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்கவும்.
மாதாந்த டியூசன் கட்டணம் ரூ 5,000/- வழங்கப்படும்.

தொடர்பு:

திரு. சி. சிறீகாந்தன்,
846, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[36378]



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம்

தோற்றம்: 22-05-1932 மறைவு: 23-04-1994

அன்போடு அறிவூட்டி பண்புள்ளம் நாம் பயில எண்ணங்கள் தந்தெம்மை இதமாக வாழவைத்த உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (36348)


# யாழ். பாடசாலைகளுக்குப் பணத்தை அள்ளி வழங்கும் 'பாரியாக' கோப்பாய்

ஒரு பிரதேசத்தின் கல்வி ஆராய்ச்சி என்பது மனித நோக்கத்துடன் கூடியதாகவும் உளவியல் ரீதியாகவும் ஆராயப்பட வேண்டும். இங்கே ஆராயப்படுபவை மற்றைய திணைக்களங்களைப் போன்று அஃறிணைப் பொருள்களல்ல. அத்துடன் ஆராய்ச்சி செய்பவர் எப்படி இருக்க வேண்டுமென்று மெய்யியல் விஞ்ஞானியான மில் கியூம் போன்றோர் கூறியிருக்கின்றனர். பரிசோதனைச் சாலை முறை — கள முறை — பேட்டி காணல் — வினாக் கொத்து அனுப்பல் — பின் தொடரல் போன்றபல முறைகள் உள்ளன. அதிலும் பல குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆய்வுக்கு முதல் நிலை, இள நிலைப் பரீட்சை முடிவுகள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டன இதில் கோப்பாய் தொகுதியிலுள்ள 1 ஏபி, 1சி, 11 தர பாடசாலைகளை விட III ஆம் தரப் பாடசாலைகள் பலவற்றின் முடிவுசிறந்ததாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இது ஏன்? வசதிகள் பல படைத்தனவும், அளவுக்கு மேல் ஆசிரிய வளத்தையும் ஆளணியினரையும் கொண்டனவுமாகிய பாடசாலைகளின் உண்மை நிலைஎன்ன? கோப்பாய் தொகுதி மருதனார் மடத்துடன் இணைந்திருந்த காலங்களிலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணங்களை பின்பு ஆராய்வோம்.

கோப்பாய் தொகுதியின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் தான். அவர்கள் எப்போதும் இரட்டை வேடமே போடுகிறார்கள். கோட்ட அதிகாரிகளாக இருக்கும் போது கோட்டத்தை (தொகுதியை) விட்டு வேறு பாடசாலைகளுக்கு மாணவர்களைச்சேர்க்க முடியாதெனக் கட்டளைகள் பிறப்பிக்கிறார்கள். தமது பிள்ளைகளையும், தமது உறவினர் நண்பர்களது பிள்ளைகளையும் பிரபல பாடசாலைகளில் சேர்க்கின்றார்கள். இந்த நடவடிக்கையில் கோப்பாய் தொகுதியில் உள்ள 1 ஏ பி, 1 சி 11 ஆம் தரப் பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் அடங்குவர்.

கோப்பாய் தொகுதி பிரபல பாடசாலை அதிபர்கள் ஓ. எல். நன்றாகச் சித்தியடைந்த மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் நடத்தும் போராட்டத்தை பாடசாலைகளில் சென்றால் பார்க்கலாம்.

இது மட்டுமல்ல; கொத்தணி முறை நடைமுறையில் இருந்தபோது யாழ் மாவட்டத்தில் கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளை விட சிறிய பாடசாலைகளே கல்வியிலும் இணைப் பாடவிதானத்திலும் உயர் நிலையில் இருந்தன. இதைக் கோப்பாய் தொகுதியூடாகப் பார்த்தால் அச்சுவேலி மகா வித்தியாலயத்தை விட, இடைக்காடு மகா வித்தியாலயம், சென்ற் திரேசா போன்ற பாடசாலைகள் முன்னணியில் உள்ளன. புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை விட, ஆவரங்கால் நடராசா இராமலிங்கம், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயங்களும், அத்தியார் இந்துக் கல்லூரியை விட சரந்தன் இராமுப்பிள்ளை, நீர்வேலி சி. சி. ரி. எம். எஸ் போன்ற பாடசாலைகளும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை விட கோப்பாய் நாவலர் வித்தியாலயமும், உரும்பராய் இந்துக் கல்லூரியை விட, உரும்பராய் சைவ தமிழ் வித்தியாலயமும் பல வழிகளிலும் உயர்ந்திருப்பதைக் காண முடியும். கல்வி, சின்னப் பாடவிதானம், பாடசாலை நிர்வாகம், புற வேலைகள், ஒழுங்கு முதலியவற்றில் இப்பாடசாலைகள் யாழ். மாவட்ட ரீதியிலேயே முன்னணியில் உள்ளன.

கோப்பாய் தொகுதி யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குப் பணத்தை அள்ளி வழங்கும் ''பாரி''யாகவே இருக்கின்றது. அண்மையில் பட்டினம் இருப்பதாலும் அதிகமானோர் வெளிநாடுகளில் இருப்பதாலும் அதிகாரிகளின் பிள்ளைகளோடு போட்டி போட்டுப் பல பிள்ளைகள் பட்டினம் செல்வதையும் காணலாம். கோப்பாய் தொகுதியை விட்டு கல்விக்காக தினமும் சுமார் பத்து பஸ் வண்டிகளில் மாணவர்கள் பட்டினத்தை நோக்கிச் செல்கின்றனர். சைக்கிளில் செல்வோர் இதை விட அதிகம். எழுத்தறிவு இல்லாத பெற்றோர் கூட வெளிநாட்டுப் பணத்தால் தம் பிள்ளைகள் பட்டினத்தில் படிப்பதையே விரும்புகின்றனர். இந்நிலையில் பட்டினப் பாடசாலைகளில் ஒரு புள்ளி விவரம் எடுத்தால் பட்டினத்தில் வாழும் பிள்ளைகளை விட இங்கிருந்து செல்லும் பிள்ளைகளே அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் கோப்பாய் தொகுதியில் தங்குவது ''இந்த மண் எங்களின் சொந்த மண்'' என்ற நினைப்போடு வாழும் ஏழை எளியவர்களின் பிள்ளைகளும், அன்றாடச் செலவுக்கே அல்லற்படும் அரசாங்க உத்தியோகத்தர்களின் (சிற்றூழியர்கள்) பிள்ளைகளுமேதான். இந் நிலையிலும், தொகுதியில் உள்ள பிரபல பாடசாலைகளுக்குப் போய் மிகுதியானவர்களே இந்த III ஆம் தரப் பட்ட பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

> 'யாழ்மாவட்ட மாணவர்களின் அவல நிலை — பெற்றோர் புத்தி ஜீவிகளை கவலையுற வைக்கும் இன்றைய கல்வித்தர வீழ்ச்சி'' என்ற தலைப்பில் 20-03-1995 ஆம் திகதிய உதயனில் வெளிவந்த கட்டுரை குறித்து வாசகர்கள் பலரும் தமது கருத்துக்களை எழுதியுள்ளனர்.
>
> நீர்வேலியைச் சேர்ந்த திரு. க. சி. நடராசாவின் கருத்துகளை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

இப்படியிருக்க, இம் III ஆம்தரப் பாடசாலைகள் எப்படி நல்ல கல்வியை வழங்குகின்றன என்று யாராவது ஆராய்ச்சி செய்தார்களா? இதில் வேடிக்கை என்னவென்றால், இச்சிறிய வசதி குறைந்த பாடசாலைகளின் கல்வியிலும் இணைப் பாடவிதான சேவைகளிலும் பட்டினப் பாடசாலைகளுக்கே இப்பாடசாலைகள் சவால் விடுகின்றன. 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகளை ஆராய்ந்தால் இது புரியும். இணைப் பாடவிதானத்தைப் பொறுத்தமட்டில் கோப்பாய் நாவலர் வித்தியாலயம் 15 வயதுக்குட்பட்டோரின் உடற் பயிற்சிப் போட்டியில் 9, 10, 11, 12 வயதினரைப் பயிற்றுவித்து மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

முன்பு கோப்பாயை விட்டு கல்விக்காக வெளியேறுவோர் குறைவு காரணம் அதிபர்கள் தகுதியின்படி நியமிக்கப்பட்டனர். கொத்தணி முறை நடைமுறைப் படுத்தப்பட்ட பின்பு கொத்தணி அதிபர் தமது பாடசாலைக்கு வளம் சேர்த்ததோடு தனது நம்பிக்கைக்குரியவர்கள், வேண்டியவர்கள், இனத்தவர்கள் ஆகியோருக்கு அதிபர் பதவியும் சலுகைகளும் கொடுத்தனர். இந் நிலையில் கல்வியில் உயர் நிலையை எப்படி எதிர்பார்க்கலாம்.

கோப்பாயைப் பொறுத்தவரை பாடசாலைக்குள் நிர்வாக ஒழுங்கீனம், மனைவி,

**க.சி. நடராசா**
நீர்வேலி

உறவினர், நண்பர்களின் தலையீடுகளினால் ஆசிரியர்களும் அதிபர்களும் பாதிக்கப் பட்டுள்ளனர். அதிபர்களும் ஆசிரியர்களும் நிம்மதியாக பல பாடசாலைகளில் கடமையாற்ற முடியாதுள்ளது. மூலாதாரப் பாடசாலைகளாக விளங்கிய கொத்தணிப் பாடசாலைகள் பலவும் மற்றைய பாடசாலைகளின் வளர்ச்சியில் பொறாமை கொண்டு அவற்றைக் கெடுக்கப் பார்த்தனவே தவிர, உதவி செய்யவில்லை. ஆய்வு செய்து பார்க்கவும்.

உதாரணமாக, சிறிய ஒரு பாடசாலை தனது மாணவர்களின் நன்மை கருதி மேலதிக வகுப்புகளை நடத்தும் போது பெரிய பாடசாலைகள் பிரமுகர்களை அழைத்து விழாவெடுத்து மகிழ்ந்தன. இதையே கல்வி நிர்வாகிகளும் விரும்புகின்றனர் போலும். சுமார் 10—15 வருடங்களுக்கு முன்னர் மாணவர் திறமை பார்த்து கணித்த அதிகாரிகள் தற்பொழுது நட்பு, விழாக்களைப் பார்த்து தரத்தைக் கணிப்பதைக் காண முடிகிறது. கோப்பாய்த் தொகுதியில் உள்ள சில பாடசாலைகள் ஒழுங்காக யூனிபோம் அணிந்துரை கட்டி நிரையாகச் செல்வதையே கற்பிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக ரியூசன் இன்று முன்னேறியுள்ளது. இந்த ரியூசன் முறையிலும் கல்வியதிகாரிகளின் பிள்ளைகளும், வெளிநாட்டு, உள்நாட்டுப் பணக்காரர்களின் பிள்ளைகளுமே பயன் படுகிறார்களா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும். ரியூசனுக்குச் செல்லாத பல பிள்ளைகளும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

கோப்பாயின் கல்வித் தரத்தைத் தான் ஆராய வேண்டும்: அத்தோடு கோப்பாய்ப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே சரியான ஆய்வாகும். கோப்பாய்ப் பிள்ளைகள் க.பொ.த சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். கோப்பாயில் நல்ல பாடசாலைகள் பல உள்ளன. நல்ல பாடசாலையைப் போல் காட்டிக் கொள்வனவும் பல உள்ளன. இரண்டாவதாகக் கூறப்பட்ட பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பற்றி பெரிதாக, பெரிய மட்டங்களில் பேசப் படுவதால் அவை கல்வியில் போதிய சிரத்தை எடுப்பதில்லை. இப் பாடசாலைகளில் அதிபருடைய பிள்ளைகளோ ஆசிரியர்களது பிள்ளைகளோ கல்வி கற்காமை தான் இதற்குக் காரணமாகும்.

ஓர் ஆய்வை முன்னெடுக்கும் போது பல முன் ஆயத்தங்களைச் செய்தல் வேண்டும். அத்தோடு கல்வி அறிவு உயர்வைப் பற்றியோ குறைவைப் பற்றியோ ஆராய்வதாயின் குறைந்தது ஐந்து வருடப் பெறுபேறுகளையாவது ஆராய்தல் வேண்டும். பரீட்சை மூலம் எழுத, வாசிக்க முடியாத மாணவர்களை எப்படி அறிவது? 5ஆம் ஆண்டுப் பிள்ளை இரண்டாம் ஆண்டுக்குரிய புத்தகத்தை வாசிக்கலாம். இரண்டாம் வகுப்புக்குரிய கணக்கைச் செய்யலாம். எனவே, அம் மாணவனுக்கு எழுத, வாசிக்கத் தெரியாது என்று கூற முடியுமா?

இவ்வாராய்ச்சி நடத்த பல காலம் செல்லும். பல வழிமுறைகளைக் கையாளுதல் வேண்டும். அத்துடன் இலங்கை முழுவதும் ஏன் உலகளாவிய ரீதியில் எழுத படிக்க தெரியாத மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். என்பதை பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இதை விட்டு, கோப்பாயில் மட்டும்தான் எழுத, படிக்கத் தெரியாதவர்கள் உள்ளனர் என்று கூறுவது ஏற்கக் கூடிய ஒன்றல்ல.

★

## கலை ஊடக இணையக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23

பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட கலை ஊடக இணையக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இத்துறையைச் சார்ந்த அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-14)


திருவருள் மிகு ஆனைக்கோட்டை கரைப்பிரான்

ஆதி விநாயகர் தேவஸ்தானம்

## புதிய சித்திர மணித்தேர் வெள்ளோட்ட விழா

காலம்: 23 04 95 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி. பகல் 2.00 மணி

சித்திர மணித்தேர் நிர்மாணிப்பு 'சிற்பஜோதி' சு. இராசரத்தினம் அவர்களும், அவரது முது பெரும் கலைஞர்களும் "விநாயகர் சிற்பாலயம்"

திருநெல்வேலி அடியார்கள் விழா பொலிவு கண்டு சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

சோம. சிவகுமாரசர்மா,
ஆதீன அர்ச்சகர்.

விளம்பர உபயம்; இ. முருகுந்தன் (36381)



## O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. V. N. பதிமநாதன் |
| விஞ்ஞானம் | — | திரு. விக்னா (Vickna) |
| தமிழ் | — | திரு. சாந்தன் |
| சமூகக்கல்வி | — | திரு. ஸ்ரான்லி |
| ஆங்கிலம் | — | திரு. ராஜரட்ணம் |
| வர்த்தகம் | — | திரு. T. வாமதேவா |
| சமயம் | — | திரு. ஸ்ரீஸ் |

மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பம்: 20-04-1995

பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்



## பாரதி சித்தன்கேணி

O/L DAY CLASS

ஆரம்பம்: 24-04-1995
திங்கள் 8.0J மணி

எமது தனித்துவம் பெற்ற யாழ். ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | Mr. தேவா |
| கணிதம் | — | Mr. சங்கர், Mr. நடா |
| சமூகக்கல்வி | — | Mr. கிரிதரன், Mr. புவனேந்திரன் |
| தமிழ் | — | Mr, பிரதீபன் |
| ஆங்கிலம் | — | Mr. அருமைநாயகம் |
| வர்த்தகம் | — | Mr. விஜேந்திரன் |
| சமயம் | — | Mr. கிரிதரன் |
| விவசாயம் | — | Mr. கோணேஸ்வரன் |

குறிப்பு!

I. மேற் குறிப்பிட்ட ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பார்கள்

II. முக்கிய பாடமான கணிதம் ஆசிரியர்கள் திரு. சங்கர், திரு நடா, இவ்விரு ஆசிரியர்களினாலும் ஒரே கட்டணத்தில் மேலதிக கட்டணமின்றி வாரத்தில் 10 மணித்தியாலங்கள் நடைபெறும்.

அனுமதிகளை முன் கூட்டி பெற்றுக் கொள்ளவும்
(8330)



## எடிசன் அக்கடமி

(யாழ் இந்து அருகில்)
411/1, K.K. S Rd.
யாழ்ப்பாணம்

(கொக்குவில் இந்து அருகில்)
27, K. K. S Rd.
கொக்குவில்

O/L DAY CLASS

| | |
|---|---|
| கணிதம்<br>திரு. B. P. பாஸ்கரன் | ச. கல்வி<br>பிரபல ஆசிரியர்கள் |
| விஞ்ஞானம்<br>திரு. J. J. கொலின்ஸ்<br>திரு. என். செல்வா | தமிழ்<br>திரு A. ஆர்த்திகன்<br>திரு. S. மணிமாறன் |
| ஆங்கிலம்<br>திரு. C சத்தியமூர்த்தி<br>திரு. J. C. J மனுவேல் பிள்ளை | வர்த்தகம்<br>திரு. K. விக்கி<br>திரு. T. அரவிந்தன் |
| சமயம்<br>திரு. S மணிமாறன் | சித்திரம்<br>திரு. S.P சோதி |

ஆரம்பம்
24-04-1995 மு. ப 8. 30
(சி/1071)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செச்சின்யாவை முழுக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் நோக்குடன் தொடரும் ரஷ்ய ராணுவ நடவடிக்கை

1994 டிசம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமான செச்சின்யா யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சுமார் 40 தினங்கள் கடும் சண்டையிட்ட பின்னர், ஜனவரி 19 ஆம் திகதி ரஷ்யப் படைகள் தலைநகர் குரொஸ்னியை கைப்பற்றின.

ஆரம்பத்தில் ரஷ்யப் படைகளின் பிரதான நோக்கம் குரொஸ்னியைக் கைப்பற்றுவதாகவே இருந்தது.

குரொஸ்னியைக் கைப்பற்றிய ரஷ்யப் படைகள் தற்போது செச்சின்யாவின் ஏனைய பகுதிகளிலும் தாக்குதலை நடத்தி வருகின்றன.

தலைநகர் குரொஸ்னி கைப்பற்றப்படும் வரை ரஷ்யப் படைகளுக்கும் செச்சின்யப் படைகளுக்கும் இடையில் ஒரு மரபுவழி யுத்தமே நடைபெற்றது.

குரொஸ்னி வீழ்ச்சி அடைந்த பின்னர் செச்சின்ய யுத்தம் ஒரு கெரில்லா யுத்தமாக மாறிவிட்டது.

### டுடயேவ் தலைமறைவு

செச்சின்ய பிரிவினைவாதத் தலைவர் ஜோக்கர் டுடயேவ் (Jokhar Dudayev) தலைமறைவாகி விட்டார்.

ரஷ்யாவுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளார்.

தலைநகர் குரொஸ்னியைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற யுத்தத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான ரஷ்யப் படைகளும் செச்சின்ய மக்களும் இறந்துவிட்டனர்.

பெரும்பாலும் போதிய பயிற்சி பெறாத சிவிலியன்களைக் கொண்ட செச்சின்யப் படைகள், எதிர்பாராத விதத்தில் ரஷ்யப் படைகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.

### சுடுகாடாக காட்சி தரும் குரொஸ்னி

தலைநகர் குரொஸ்னி தற்போது சுடுகாடு போல் காட்சி அளிக்கிறது. ரஷ்ய விமானங்களின் இடைவிடாத குண்டு வீச்சினால் கட்டடங்கள் அழிந்து எரிந்த நிலையில் காணப்படுகின்றன. குண்டு வீச்சினால் பிரதான பாதைகளில் பாரிய குழிகள் காணப்படுகின்றன.

ரஷ்யப் படைகள் ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் கெரில்லா யுத்தத்தில் பயிற்றப்பட்டிருப்பதால் செச்சின்யாவில் டுடயேவ்வின் படைகளை இலகுவில் தோற்கடித்துவிட முடியும் என்று கருதப்பட்டது.

ஆனால் யுத்தம் நீடித்துக் கொண்டிருக்கிறது. ரஷ்யப் படைகள் வென்றாலும் மக்களின் ஆதரவு இன்றி ராணுவத்தை வைத்து ரஷ்யா எவ்வளவு காலம் ஆட்சி நடத்த முடியும் என்பதே இன்றைய கேள்வி ஆகும்.

### ஆப்கானிஸ்தானில்

1979ஆம் ஆண்டும் கிட்டத்தட்ட ஒரே மாதம் ஒரே நாளில் தான் ஆப்கானிஸ்தானுக்குள் ரஷ்யப் படையெடுப்பு இடம் பெற்றது. ஆனால் தலைநகர் காபூலை மிகவும் குறைந்த இழப்புகளுடன் ஒரே நாளில் ரஷ்யப் படைகள் கைப்பற்றி இருந்தன.

ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன் போராளிகளுடன் ரஷ்யப் படைகள் சுமார் பத்து ஆண்டுகள் கெரில்லா யுத்தம் செய்ய வேண்டி இருந்தது.—

மத்திய கிழக்கில் உள்ள அரபு நாடுகளும் மற்றும் பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகளும் முஜாஹிதீன் கெரில்லாக்களுக்கு ஆதரவாக, ஆப்கானிஸ்தானுக்கு பயிற்சி பெற்ற போராளிகளை அனுப்பி இருந்தன.

தற்போது செச்சின்யத் தலைவராக இருந்து வரும் டுடயேவ் அப்போது சோவியத் விமானப்படையின் குண்டு வீச்சு விமானம் ஒன்றின் கப்டனாக இருந்தவர்.

காபூல் மீதான கண் மூடித்தனமான விமானத் தாக்குதல்களுக்குக் காரணமாக இருந்தவர்.

சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி 6 வருடங்கள் கழிந்து விட்டன. சோவியத் படையணியில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு எதிராக யுத்தம் செய்த டுடயேவ் தற்போது ரஷ்யப் படைகளுக்கு எதிராக யுத்தம் செய்து வருகிறார்—

அது மட்டும் அல்ல ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடுவதற்காக வெளிநாடுகளில் இருந்து சென்ற போராளிகள் யுத்தம் முடிவடைந்து தமது சொந்த நாடு திரும்பிய பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் சேர்ந்து அரசுகளுக்குப் பெரும் சவாலாக மாறி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானும் அதிகாரப் போர் காரணமாக பிளவு பட்டுக் கிடக்கிறது.

**வெளி உலகில்**

### 1991 இல்

1991 செப்ரெம்பர் மாதம் செச்சின்யா தனி நாடாகப் பிரகடனம் செய்து கொண்டது.

## மனித உரிமை மீறல்களினால் யெல்ட்சினுக்கு பெரும் அபகீர்த்தி

1991இல் கன்சர்வேட்டிவ் போக்குடைய தீவிரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி —

அதன்பின்னர் 1993 இல் ரஷ்ய நாடாளுமன்றம் யெல்ட்சினைக் கவிழ்க்க மேற்கொண்ட சதி —போன்ற பல்வேறு அரசியல் குழப்பங்களினால் செச்சின்யா மீதான ரஷ்ய ராணுவ நடவடிக்கை பின்போடப்பட்டு வந்தது.

1993 இல் நாடாளுமன்ற சதியை அடக்குவதற்காக ராணுவம் வரவழைக்கப்பட்டது.

ரஷ்யப் படைகள் நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்தி யெல்ட்சின் எதிர்ப்பாளர்களை மிகவும் மோசமான முறையில் அடக்கி இருந்தன.

இதே படைகள் தான் தற்போது செச்சின்யாவில் மனித உரிமைகளை மீறும் விதத்தில் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

### அமெரிக்க நிலை

செச்சின்யா மீதான ரஷ்யாவின் ஆதிபத்திய உரிமையை அமெரிக்கா ஆதரிக்கின்றது.

ஆனால் செச்சின்யாவில் ரஷ்யப்படைகள் மேற்கொள்ளும் மோசமான அடக்கு முறைகளை அமெரிக்கா எதிர்க்கிறது.

ரஷ்யாவின் அடக்கு முறையில் பிரேஷ்னேவ் காலத்து சோவியத் யூனியனின் சாயலை அமெரிக்கா காண்கிறது.

ரஷ்யா தனது பொருளாதார மேம்பாட்டுக்கு அமெரிக்காவிலும் ஐரோப்பிய கவுன்சிலிலும் தங்கி இருப்பது அமெரிக்காவுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

செச்சின்யச் சண்டை காரணமாக ரஷ்யாவுக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த உதவிகளை ஐரோப்பிய கவுன்சில் பின் போட்டுள்ளது.

### மனித உரிமை மீறல்

ரஷ்யப் படைகள் மீதான பிரதான குற்றச்சாட்டு மனித உரிமை மீறலே.

செச்சின்ய இளைஞர்கள் ரஷ்யப் படைகளின் பார்வையிலே பயங்கரவாதிகளாகவே காணப்படுகின்றனர்.

### காக்கேசியன் பிராந்தியம்

ரஷ்யாவின் தென் பகுதியில் உள்ள காக்கேசியன் பிராந்தியத்தில் (Caucasus) உள்ள ஒரு குடியரசு செச்சின்யா ஆகும்.

சுமார் 12 லட்சம் மக்களைக் கொண்டது இந்தக் குடியரசு.

2 லட்சம் பேர் ரஷ்ய இனத்தவர்கள். ஏனையோர் சுனி முஸ்லிம்கள்.

செச்சின்ய சுதந்திரப் போராட்டத்தை அடக்காவிட்டால் காக்கேசியன் பிராந்தியத்தில் உள்ள ஏனைய குடியரசுகளும் செச்சின்யாவின் பாதையில் சென்று பிரிந்து விடும் என்று ரஷ்யா அஞ்சுகிறது.

அத்துடன் செச்சின்யா பிரிந்து விட்டால் அயலில் உள்ள முஸ்லிம் நாடுகள் வலுப் பெற்று விடும் என்று ரஷ்யா கருதுகிறது.

### பாவல் கிறச்சேவ்

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் பாவல் கிறச்சேவ் (Pavel Grachev) ஜனாதிபதி யெல்ட்சினின் மிகவும் நெருங்கிய சகா.

ஆகவே ஆரம்படைகளின் ஆதரவு இருக்கும் வரை யெல்ட்சினை எவரும் அசைக்க முடியாது.

சோவியத் யூனியனில் நிகிட்டா குருஷேவ்வின் ஆட்சிக் காலத்தில் அவரது சீர்திருத்தங்களை கன்சர் வேட்டிவ் தீவிரவாதிகள் எதிர்த்தனர். ஆயுதப்படையின் ஆதரவும் குருஷேவ்வுக்கு குறைவாகவே இருந்தது. இறுதியில் குருஷேவ் பதவி கவிழ்க்கப்பட்டார்.

பிரெஷ்னெவ் தலைமையிலான கன்சர்வேட்டிவ் தீவிரவாதிகள் கைக்கு ஆட்சி மாறியது.

தற்போது யெல்ட்சினின் சீர்திருத்தங்களுக்கும் கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது. அதே போன்று செச்சின்யா மீது ரஷ்யப் படைகள் நடத்தும் தாக்குதல்கள் காரணமாக உள்நாட்டில் யெல்ட்சின் மீது கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ரஷ்யா பாதுகாப்பு அமைச்சர் பாவல் கிறச்சேவ் மீது தற்போது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஆகவே பாவல் கிறச்சேவின் எதிர் காலம் கேள்விக்கிடமாகவே இருந்து வருகிறது எனலாம். ஆகவே ஆயுதப் படைகளின் முழு ஆதரவு இருக்கும் வரை தான் யெல்ட்சின் எதனையும் சாதிக்க முடியும். ★

-சஞ்சாரன்-

---

# ஜப்பானியர்களை கிலி கொள்ளச் செய்யும் மதக் குழுவின் விஷவாயுத் தாக்குதல்கள்

மதத்தை அடிப்படையாகக் கொண்ட குழு ஒன்று, முன்னர் இந்தளவுக்கு ஜப்பானிய மக்களின் கவனத்தை ஈர்த்ததில்லை; அவர்களிடையே பீதியைத் தோற்றுவித்ததில்லை.

'அவும் ஷின்ரி கியோ' [Aum Shinti Kyo]

ஜப்பானின் மூலை முடுக்குகளில் மட்டுமல்லாமல், உலகெங்கும் இன்று உச்சரிக்கப்படும் பெயர் இந்த மதப் பிரிவின் தலைவரான 'ஷோகா அஷரா' (Shoka Ashara) 1997இல் உலகம் அழிந்து விடும் என்று கூறி ஏற்கனவே உலகின் கவனத்தை ஈர்த்து பிரபல்யம் பெற்றவர்.

விஷவாயுக்களைப் பரப்பியே உலகை அழித்து விடும் திட்டம் ஒன்றை தன்வசம் வைத்துக்கொண்டுதான் அவர் அவ்வாறு கூறினார் என்று தற்போது சிலர் நினைக்கின்றனர்.

அவரது தலைமையிலான 'அவும் ஷின்ரி கியோ' மத அமைப்பினர் ஜப்பானில் நடத்திய இரண்டாவது விசவாயு தாக்குதல் சம்பவம் கடந்த புதனன்று "யொகஹாமா" நகரில் இடம் பெற்றது. அதற்கு சரியாக 30 நாட்களுக்கு முன் டோக்கியோ நகருக்கு அருகில் சுரங்க ரயில் ஒன்றில் இந்த மத அமைப்பினர் தமது முதலாவது விஷவாயுத் தாக்குதலை நடத்தினர்.

மார்ச் 20ஆம் திகதி அதிகாலை, டோக்கியோ நகரை ஊடறுத்துச் சென்ற அந்த சுரங்க ரயிலில் அப்படி ஒரு விபரீதம் நடக்கும் என்று பயணிகளில் எவருமே கற்பனை பண்ணிப் பார்த்திருக்க மாட்டார்கள்.

பரபரப்பு மிக்க வாழ்வில் அது போன்ற ரயில் பயணங்களில் மட்டும் கிடைக்கும் ஆறுதலை அனுபவித்துக் கொண்டிருந்த பயணிகளை ஒரு நொடியில் அபாயம் சூழ்ந்து கொண்டது.

ரயிலில் திடீரென பரவியது ஒரு வித நெடி அதை உணரும் முன்பே, பலர் மயங்கிச் சரிந்தனர்.

நூற்றுக் கணக்கான பயணிகள் கைக்குட்டையால் மூக்கைப் பொத்தியபடி ரயிலில் அங்குமிங்கும் சிதறி ஓடினர்.

என்ன, ஏது என்று அறியாத பலர் கூச்சலிட்டனர்.

ஒரு சில நிமிடங்களுக்குள் ரயிலுக்குள் பெரும் களேபரம் ஏற்பட்டது.

அதனை அடுத்து இந்த ரயில் அவசர அவசரமாக நிறுத்தப்பட்டு, சுரங்கப்பகுதி மூடப்பட்டது.

ரயில் நிறுத்தப்பட்ட பகுதிக்கு, நூற்றுக்கணக்கான அம்புலன்ஸ் வண்டிகள் சகிதம் பொலீஸார் விரைந்தனர்.

ரயிலுக்குள்ளும், பிளட் போமிலும் ஆங்காங்கே மயங்கிய நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான பிரயாணிகள் அவசர அவசரமாக அம்புலன்ஸ்களில் ஏற்றப்பட்டு ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஒரு சில நிமிடங்களுக்குள் 20 பேரின் உயிரைப் பலிவாங்கவும், பல ஆயிரக்கணக்கானோருக்கு நரம்பியல் தாக்கங்களை ஏற்படுத்தவும் காரணமாக இருந்தது. உலகில் மிகக் கொடியவாயுவான "ஸரின்" என்பது பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது.

இந்த விஷவாயு தாக்குதல் பற்றிய செய்தி பரவியதும், டோக்கியோ நகரம் எங்கும் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது.

### ஸரின் விஷவாயு

2 ஆம் உலக யுத்த காலத்தின் போது "ஸரின்" விஷவாயு உலகில் அறிமுகப்படுத்தப்பட்டது.

யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக சர்வாதிகாரி ஹிட்லர், விஞ்ஞானிகளைக் கொண்டு இந்தக் கொடிய விஷவாயுவை கண்டு பிடித்தார்.

பொட்டாசியம் சயனைட்டைவிட ஸரின் விஷவாயு மிக மோசமானதாகும்.

நாஸிகளிடம் இருந்த இந்த ஸரின் விஷவாயுவின் கையிருப்பு, 2ஆம் உலக யுத்தத்தின் பின் அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

எனினும் யுத்தத்துக்குப் பின்னரும் 40 லட்சம் லீற்றர் ஸரினை அமெரிக்க ராணுவம் தொடர்ந்து ஜேர்மனியில் வைத்திருந்தது.

அப்பாவி மக்கள் பயணம் செய்த ரயிலில் இந்த விஷவாயு பரப்பப்பட்ட செயல் மிலேச்சத்தனமானது என்றும் பெரும் அட்டூழியம் என்றும் பரவலாக கண்டனங்கள் எழுந்தன.

முகமூடி அணிந்த 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் பார்சல் ஒன்றை ரயிலில் விட்டு விட்டுச் சென்றதை பயணிகள் கண்டதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

அந்தப்பார்சலில் இருந்தே "ஸரின்" வாயு வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வன்முறைச் சக்திகளாக உருவெடுக்கும் புதிய அச்சுறுத்தல்

300 இற்கும் மேற்பட்ட புலனாய்வு நிபுணர்களும் மோப்ப நாய்கள் சகிதம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலீஸாரும் இச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### பொலீஸ் அதிகாரி சுடப்பட்டார்

இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பான புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட 'டகாயி குனிமட்சு' (TakaJi-Kuni Matsu) என்ற உயர் பொலீஸ் அதிகாரி அவரது வீட்டுக்கு அருகே வைத்து சுடப்பட்டார்.

சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர் ஒருவர் இவரைச் சுட்டு [illegible] சென்றார்.

இச்சம்பவம் [illegible] நடவடிக்கைகளில் திருப்பத்தை ஏற்படுத்தியது.

விஞ்ஞான தொழில் நுட்ப வல்லமை கொண்ட ஒரு குழு இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கக் கூடும் என பொலீஸார் நம்பினர்.

"அவும் ஷின்ரி கியோ" [Aum Shinri Kyo] என்ற ரகசிய மத அமைப்புக்கும் இச் சம்பவத்திற்கும் தொடர்பு இருப்பதாக பொலீஸாருக்கு அநாமதேய தகவல்கள் கிடைத்தன.

இந்த அமைப்பு டோக்கியோவிற்கு அண்மையில் "மவுண்ட் பியூஜி" (Mount-Fuji) மலைக்கு அருகில் இயங்கி வருகிறது.

ஜப்பானில் இது போன்ற மத அமைப்புக்கள் பல இயங்குகின்றன; அவற்றில் 'அவும் ஷின்ரி கியோ' அமைப்பே பல்லாயிரக் கணக்கான அங்கத்தவர்களைக் கொண்ட சக்தி வாய்ந்த மத அமைப்பாகத் திகழ்கிறது. ஜப்பானிய மொழியில் 'அவும் ஷின்ரி கியோ' என்பது [illegible] என்ற கருத்தைக் கொண்டதாகும்.

> **ஜப்பானில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மதக்குழுக்கள் உள்ளன. அவற்றில் "அவும் ஷின்ரி கியோ" அமைப்பு பிரபலமானது.**
>
> **சமீப காலமாக இந்த அமைப்பினர் நடத்திவரும் விஷவாயுத் தாக்குதல்கள் ஜப்பானியர்களை கிலி கொள்ள வைத்துள்ளது.**
>
> **மத உணர்வுகளால் தூண்டப்பட்ட இத்தகைய கும்பல்களின் வன்முறைத் தோற்றம் ஜப்பானியர்களுக்கு மட்டுமல்ல; முழு உலகத்துக்குமே புதிய அச்சுறுத்தலாகும்.**

### ஜப்பானில் மதக்குழுக்கள்

விஞ்ஞான, தொழில் நுட்ப துறைகளில் ஏற்பட்ட மிகவேகமான வளர்ச்சி ஜப்பானியர்களின் வாழ்வை இயந்திரத் தனமாக்கி இருக்கிறது.

உறவுகளிடையே நெருக்கமின்மையும், பரபரப்பான வாழ்க்கை முறையும் அங்குள்ள புதிய தலைமுறையினரிடையே விரக்தியையும், வாழ்வின் மீதான வெறுப்பையும் ஏற்படுத்துகிறது.

தியானம், கூட்டு வழிபாடு, குழுக்களாகச் செயற்படுதல் போன்றவற்றின் மூலம் அவர்கள் ஆறுதல் தேட முனைகின்றனர்.

இதன் விளைவாக அங்கு புதிய, புதிய மதக் குழுக்கள் பல உருவாகின்றன.

இத்தகைய மதக் குழுக்கள் காலப்போக்கில் தீவிரத் தன்மை பெற்று சட்ட விரோத நாசகார கும்பல்களாக மாறி விடுகின்றன.

இத்தகைய தீவிரத் தன்மை கொண்ட அமைப்பே இந்த 'அவும் ஷின்ரி கியோ'.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் தம் குடும்பங்களைத் துறந்து ஒரு சமூகமாக இந்த மதப் பிரிவில் இயங்குகின்றனர்.

### அலுவலகம் முற்றுகை

சுரங்க விஷ வாயு சம்பவம் தொடர்பாக இம் மதக் குழுவின் அலுவலகம் ஜப்பானியப் பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டது.

தற்காப்பு முகமூடி அணிந்தபடி ஜப்பானியப் பொலீஸார் அந்தக் கட்டடத்தை சல்லடை போட்டுத் தேடினர்.

கட்டடத்தை சோதனையிட்ட இம் மதப் பிரிவை ஸ்தாபித்த தலைவர் ஷோகோ அஷஹாரா' அங்கு காணப்படவில்லை.

இத் தேடுதலின் போது 'சமிக - இஷிகி' என்ற சிறிய கிராமத்தில உள்ள இந்த மதப் பிரிவின் மைதானம் ஒன்றில் 'ஸரின்' விஷவாயு உற்பத்தி தொடர்பான அறிகுறிகளை பொலீஸ் விஞ்ஞானப் பிரிவு கண்டு பிடித்தது.

ஆனால் ஸரின்' உற்பத்தியில் தாம் ஈடுபடவில்லை என்றும், அக் கிராம மக்களே தம் மீதுள்ள வெறுப்பின் காரணமாக – தம்மை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக அந்த நச்சு வாயுவைப் பயன்படுத்தினர் என்றும் மதக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### இலங்கையிலும் கிளை

'அவும ஷின்ரி கியோ' மதப் பிரிவுக்கு, இலங்கையின் காலி, அமெரிக்காவின் நியூயோர்க், ரஷ்யாவின் மொஸ்கோ ஆகிய இடங்களிலும் கிளைகள் உள்ளன.

டோக்கியோ விஷவாயுச் சம்பவத்தைத் தொடர்ந்து, காலியில் அங்குலகலவில் உள்ள இம் மதக் குழுவின் கிளைக்கும் 'ஸரின்' வாயு அனுப்பப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

'அவும் ஷின்ரி கியோ'வின் இலங்கை கிளைக்கு, ஹபராதுவைப் பகுதியில், 48 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள தேயிலைத் தோட்டமும், பொத்தல பகுதியில் மற்றும் ஒரு தேயிலைத் தோட்டமும் சொந்தமாக உள்ளன. இங்கு உற்பத்தியாகும் தேயிலை ',அவும் டீ'' (Aum tea) என்ற பெயரில் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

4 வருடங்களுக்கு முன் இலங்கையில் 'அவும் சக்கா சங்க இயக்கம்' (Aum Sacca Sangha Association) என்னும் பெயரில் இஸ்தாபிக்கப்பட்ட இந்த மதக் குழுவில் தற்போது 285 இலங்கையர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.

ஸீஸ் இமோட்டோ (Seis Jmoto) என்ற இயற்பெயரையுடைய வண. புண்ணிய தேரர் இலங்கைக் கிளைக்கு தலைமை வகிக்கிறார்.

இவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேயதுங்காவுடன் கைகுலுக்கும் காட்சியை 'ஸரின்' விஷவாயு சம்பவத்திற்குப் பின்னர் ஜப்பானிய தொலைக்காட்சி ஒலி பரப்பியது. இது தொடர்பான தகவல்கள் ஜப்பானில் இருந்து இலங்கை புலனாய்வு துறையினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

### ரஷ்யாவிலும் தாக்குதலுக்கு திட்டம்

'அவும் ஷின்ரி கியோ' மதக்குழுவின் தாக்குதல் ரஷ்யாவிலும் நடத்தப்படக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மத அமைப்புக்கு மாஸ்கோவில் ஒரு கிளை இயங்குகிறது.

பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இந்த மத அமைப்பின் நடவடிக்கைகளைத் தடை செய்யும் உத்தரவை ரஷ்ய நீதிமன்றம் ஒன்று விடுத்துள்ளது.

### ஜப்பானில் தடை

யோகஹாமாவில் நடந்த இரண்டாவது விஷவாயுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து 'அவும் சின்ரி கியோ' மத அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை ஜப்பானிய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

ஜப்பானில் இந்த மத அமைப்பைத் தடை செய்யவும் ஜப்பானிய அரசு தீர்மானித்துள்ளது.

ஜப்பானில் ஒருலட்சத்து 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட மதக் குழுக்கள் உள்ளன.

பொருளாதாரத்தில் வியத்தகு வளர்ச்சி கண்ட ஜப்பானியர்களின் அமைதி வாழ்க்கைக்கு மத உணர்வுகளால் தூண்டப்படும் மதக்குழுக்கள் ஆபத்தாக உருவெடுத்துள்ளன.

மதத்தை ஆதாரமாகக் கொண்டு தோற்றம் பெறும் குழுக்கள் காலப்போக்கில் வன்முறைச் சக்திகளாக உருவெடுக்கும் நிலை ஜப்பானியர்கள் மட்டுமல்ல முழுஉலகமே எதிர்கொள்ளும் புதிய அச்சுறுத்தலாக மாறி விடலாம். ★

- ஆதிரை -


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

**இந்துசமய அபிவிருத்திச் சபை**
சுன்னாகம்.

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**
**04 — 06 — 1995**

பிரேரணைகள் 12 — 05 — 95க்கு முன்.

ம. சத்தியபாலர், தலைவர்
23-04-95.
(8498)
ந. செல்லையா,
சி. மகேசன்,
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சில்கி, பிறாமா இவற்றின் குஞ்சுகளும் தலையில் பெரிய கொண்டையும் காலில் இறகுகளும் உடைய குஞ்சுகளும்விற்பனைக்குண்டு. தாராக் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்: N. ரமேஷ், மே/பா K. நித்தியானந்தன் [வட்டுக்கோட்டை வீதி], சித்தன்கேணி. [36347]

Red Face African லவ் பேட்ஸ் Laying) Point, நீலம், மஞ்சள், பச்சை நிறங்கள் பெற்றுக் கொள்ளலாம். T. S. குமார், மிருக வைத்தியசாலை அருகில் சிரணி, சண்டிலிப்பாய். [36349]

சுன்னாகச் சந்தையின் தெற்கு பக்கத்து வீதியிலுள்ள பிரதான வாசலுக்கு முன்பாக 3 கடைகள் உடனடியாக விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்க்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ந. நந்தகுமார் மே/பா, சிவபெருமான் ஞானியார் வளவு, உடுவில். [8328]

ஒன்றரை மாதங்கள் நிரம்பிய பூச்சி அகற்றிய அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பழை வீதி, [வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்] சித்தன்கேணி. [36285]

அச்சுவேலி சபாபதி ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் சிவாகமசேகரம் இரண்டாம் பாகம் வெளிவந்துள்ளது கிடைக்கும் இடம் வை. கனகசபாபதிக்குருக்கள், அச்சுவேலி [36291]

அரிசி ஆலைக்கு உரிய இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பார்வதி கிறைண்டிங் மில், கண்டி வீதி, சாவகச்சேரி. [36289]

இல. 65 [C 185] பிரதான வீதியில் $1\frac{1}{2}$ பரப்புக் காணியில் அமைந்துள்ள நாற்சார வீடு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: ம. ச. ஜெயதேவன், இல. 105, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் [36379]

## தேவை

பளேட்டின் மெஷினில் வேலை செய்யும் அனுபவமுள்ளவர் தேவை. நேரில் சமுகம் தரவும். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (36325)

எமது ஸ்தாபனத்திற்கு தச்சுவேலை செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்களும், படம் பிறேம் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் இவர்களுக்கு உதவியாளர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: யாழ். நுகர்வோர் காட்சியகம், சிவன் வடக்கு வீதி சந்தி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36340]

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நல்லூர் இராணி வீதி – ஆடியபாத வீதிச் சந்தியில் இரண்டு வீதிகளுக்கும் முகப்பாகப் பயன்படுத்தக் கூடியதும் புளி, தென்னை, பனை மரங்கள் அடங்கிய ஆறரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: த. இரத்தினசிங்கம், வேலவன் வியாபார நிலையம், ஆடியபாத வீதி, நல்லூர் சந்தை. [36342]

அச்சுவேலி தெற்கு, உலவிகுளபிள்ளையார் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் "காவேரி" என்னும் வீடும், வளவு 4 பரப்பும் விற்பனைக்குண்டு. கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: தா. பாலசுப்பிரமணியம், கச்சாய் வீதி, கொடிகாமம். [36339]

## இறைச்சிகோழி விற்பனை

குறைந்த விலையில புறொயிலர் இறைச்சிக்கோழியும், சேவலும் (ஒன்று ரூபா 120) விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் கத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2 சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந் தாழ்வு யாழ்ப்பாணம். (36380)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann White இரண்டு கிழமை வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், Prima Broiler குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் விடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26362)

## கொம்பியூட்டர் தேவை

நல்ல அனுபவமுள்ள கொம்பியூட்டர் உடன் தேவை திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் நேரில் வரவும் மகாலக்சுமி அச்சகம், 127, K K. S. றோட், யாழ்ப்பாணம். [8494]

## மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 34 வயது என்ஜினியருக்கும், 36 வயது B. Sc. ஆசிரியருக்கும், 48 வயது போஸ்ட்மாஸ்டருக்கும், குற்றமுள்ள 30 வயது டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [36229)

## O/L கணிதம்

Credit, Distinction பெறு பேறடைவதற்கு ஆரம்பத்திலிருந்து விசேடமாக வாரத்திற்கு ஐந்து மணித்தியாலங்கள் (ஆண்டு 9—10 உட்பட) 15 வருடங்கள் O/L விடைத்தாள்கள் மதிப்பீடு செய்த B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல: 85, சிவன் கோவிலடி, மணல்தறைலேன் திருநெல்வேலி. (36364)

## பாலர் ஆசிரியை

பாலர் கல்விக்கழகத்தில் பாலர் பாடசாலை ஆசிரியைக்கான சில வெற்றிடமுண்டு. கணிதம், தமிழ் உட்பட O/L 6 பாடம் சித்தியடைந்த,பயிற்சியும், அனுபவமும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மூலச்சான்றிதழ்களுடன் 30-4-95 காலை 9 மணிக்கு நேரில் வரவும். பாலர் கல்விக் கழகம், 49/5, யாழ். றோட், யாழ்ப்பாணம். [36377]

பாலர் ஆசிரியர் பயிற்சி ஆரம்பம் 1995-04-29 சனிக்கிழமை க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு கற்க வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [36345]

## புலமைப் பரிசில் - 1995

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத் திட்டத்திற்கேற்ப பயிற்சி வினாத்தாள்களும், வீட்டிலிருந்தபடியே படிக்க வசதியாக ஊக்குவிப்பு பயிற்சிகளும் விடைகளுடன் எம்மிடம் / புத்தக நிறுவனங்களில் / தபாலில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, விராவி வீதி, யாழ்ப்பாணம். [8484]

## விலங்கியல் - I II

A/L வகுப்புகளுரிய விலங்கியல் - I II மாதிரி வினாத்தாள்கள் வெளிவந்துவிட்டன. தொகுப்பு: எஸ். செல்வநாயகம், வெளியீடு: சிறிசுப்பிரமணிய பொத்தகசாலை, இல 235 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (36344

## MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து, ஆண்டு 11 வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 28, வருட அனுபவமுடைய ஆசிரியரினால், 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி [8490]

## A/L பௌதிகவியல் 96/97

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய பௌதிகவியல், தூய பிரயோக கணிதம் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளோடு தனிப்பட்ட முறையிலும் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம். B. Sc. [Cey] Dip in Edu. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (36370)

## குடிநீர் கொள்கலன்

குடிநீர் கொள்கலன் (சுமார் 20 லீ) வடிவமைக்கப்பெற்று வர்ணம் தீட்டப் பெற்றது. 500 மில்லி வைற் சோப் கேஸ் உறைகள் / சலவைத்தூள் பெற்றுப் பக்கற்றுகள் தருபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். "மில்க்வைற்" [சி-1063]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 10 — 1910

உதிர்வு: 21 — 04 — 1994

திருமதி
## நாகபூஷணம் கதிரேசபிள்ளை

ஆண்டு ஒன்று சென்றாலும் அம்மா
உன் நினைவு எம்மை விட்டு
அகலாது. அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் சுடராய் வந்து எங்களுக்கு
வழி காட்டிய அம்மாவே! எங்களை
விட்டு போக எப்படி மனம் வந்தது
நாங்கள் ஆறாத்துயரில் வெந்து மடிகின்றோம்
நின்றுவழி காட்டாது பெரும் தூரம் சென்றதென்ன

உங்கள் நினைவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


சங்கானை கிழக்கு,
சங்கானை.

(சி/5792)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்: 11 — 02 — 1962



ஆண்டவன் அடியில்: 03 — 05 — 1994

செல்வன்
## இராசேந்திரம் இரவீந்திரன்

திதி: 23 — 04 — 1995

ஆண்டொன்று சென்றதையா - உன்
அன்பு முகம் மறையவில்லை - உமை
எம் இதயத்தில் இருத்திவிட்டு!
ஆண்டவன் அடியினை தான் சேர்ந்தாயோ.
நினைவினின்றும் நீங்கா நினைவுகளுடன் வாடும்,

உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

பட்டின சபை வீதி,
மானிப்பாய்.

(36366)

---

★ அதி உயர்ரக பற்றரிகள் (லொறி, கார், மோட்டார் சைக்கிள்)

★ இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த மலசலகூட பேசின், கொமேட் சுவருக்கு பதிக்கும் மாபிள், வெள்ளை சிமெந்து பேக்கறி சிமெந்து (Fire Clay)

★ பெயின்ற் வகைகளும் மற்றும் நிலவிரிப்புகள் ரெக்சின் காட்போட் சீற், ஸ்பொஞ், அப்பளிப்பு பொருள்கள், கிளாஸ் வகைகள், பிளேற்ஸ், டின், ரீமக், ரீசெற் என்பனவும்

மலிந்த விலையில் தரமான பொருள்களை பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்

## ★ நியூ விமாகி ★

27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1307)

---

# நன்றி நவிலல்

சுன்னாகம் சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானத்தில் சென்ற 16 - 04 - 95 ஞாயிற்றுக்கிழமை அன்று தேவஸ்தானத்தினரும், தொண்டர்களும் சேர்ந்து எனது குருத்துவப் பணியைப் பாராட்டி நடத்திய நிகழ்வின் போது

ஆசி நல்கிய பிரதம குருவாகிய
சந்திரகாந்தக் குருக்களுக்கும்
எனது குருவாகிய
மகாதேவக்குருக்கள்
அவர்களுக்கும்
எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன்,
பாராட்டுரை வழங்கிய
மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்,
ஆறு. திருமுருகன் ஆகியோருக்கும்
தொண்டர்களுக்கும், அடியார்களுக்கும்
நன்றியையும், ஆசியையும் வழங்குகிறேன்.

இப்படிக்கு
ச. வரதராஜேஸ்வரக் குருக்கள்,
மயிலணி கந்தசாமி கோயில்,
சுன்னாகம்.

[சி-1060]

---

பதவி வெற்றிடம்
# திட்ட அலுவலர் பதவி

பனை, தென்னை வள அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட திட்டங்களை அமுல் நடத்துவதற்கான திட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமை:
   பல்கலைக்கழக பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது க. பொ. த. (உ/த) இல் சித்தியடைந்திருப்பதுடன் திட்டமிடல், திட்ட அமுலாக்கலில் அனுபவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும்.
2. சம்பளம்:
   பேசித் தீர்மானிக்கப்படும்.
3. வயது:
   25 – 50 இற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
4. விண்ணப்ப முடிவு திகதி:
   10 – 05 – 1995

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

(சி-1061)

---

# PATRICIAN INSTITUTES

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION — PRO VERITATE ET JUSTITIA

# பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## ★ தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ★

1. **COMPUTER PROCESSING COURSES**
   (1) Programming in BASIC Language (GW BASIC Including Advanced BASIC) and MS - DOS
   DURATION 4 Months
   (2) Word Processing (Word Star Professional Rel S.O.) and MS - DOS
   DURATION: 4 Months
   (3) LOTUS 1 - 2 - 3 (Spread Sheet Analysis) and MS - DOS
   DURATION: 3 Months
   (4) d BASE III PLUS. and MS - DOS
   DURATION: 4 Months
   Equipments - Used: LASER XT/2, XT/3 386 and Bit Com. Computers (IBM Compatibles) (THEORY AND PRACTICALS)
2. **CIVIL DRAUGHTSMANSHIP and QUANTITY SURVEYING**
   QUALIFICATION: G.C.E. (O/L)
   DURATION: 6 Months
3. **BOOK - KEEPING AND ACCOUNTS**
   (வார, வார இறுதி நாட்கள்)
4. **ENGLISH CLASS –** இலக்கணத்துடன் சேர்ந்த உரையாடற் பயிற்சி
   (வார, வார இறுதி நாட்கள்)
5. **SHORT HAND & TYPING (English)**
   சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
6. **GENERAL MOTOR MECHANISM –**
   மோட்டர் வாகனங்கள் திருத்துதல்
   (Petrol & Diesel)
   DURATION: 6 Months
7. **ELECTRICAL WIRING –**
   மின்சார இணைப்பு
   DURATION: 3 Months
8. **MOTOR REWINDING –**
   மோட்டார் ரிவைன்டிங்
   DURATION: 4 Months
9. **GENERAL ELECTRICIAN –**
   ஜெனரல் எலெக்ரிஷன்
   (Wiring, Rewinding and Repairing)
   DURATION: 6 Months

குறிப்புகள்:

★ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

★ விண்ணப்பப் படிவங்களையும், பாட நெறிகளுக்கான கட்டண விபரம் மற்றும் பாடத்திட்டங்களையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகையை பெற்றுக்கொள்ளலாம்.

★ பயிற்சி நெறிகளை பயில விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று உடன் பதிவுசெய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு!

REGISTRAR,
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,**
59, St. Patrick's Road, Jaffna.

[சி-1068]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## புதிய பிரச்சினை

பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு தகுதி பெறும் மாணவர்கள், வகுப்புகளில் சேர்ந்து தமது நெறிகளைப் பயில்வதற்கு நீண்ட காலம் காத்திருக்கிறார்கள். இந்த இடைவெளியினால் மாணவர்கள் கல்வி கற்பதில் ஊக்கம் குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இந்தப் புதிய தகவல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வெளியாகி இருக்கிறது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவரும், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தலைவருமான பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் இந்தப் புதிய தகவலை வெளியிட்டிருக்கிறார்.

மாணவர்களின் பாடஅறிவை அளக்கும் அளவை மானிகளாக இன்னமும் பரீட்சைகளே விளங்குகின்றன.

மாணவன் ஒருவனின் திறமையை, ஆற்றலை இரண்டொரு மணி நேரத்தில் பரிசோதிக்கும் பரீட்சை முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று தசாப்தம் தசாப்தமாக கூறப்பட்டு வந்த போதிலும் புதிய முறை எதுவும் இன்னும் அறிமுகமானதாக இல்லை.

இந்த வகையில் மாணவனின் கல்வி வளர்ச்சியை மட்டுமன்றி வாழ்க்கை வளர்ச்சியையும் நிர்ணயிக்கும் கருவிகளாகப் பரீட்சைகளே விளங்குகின்றன. எமது கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண, உயர்தர பரீட்சைகள் முக்கிய இடங்களை வகிக்கின்றன.

க. பொ. த. ப சாதாரண தர பரீட்சையில் தகுதி பெறாத மாணவர்கள் உயர் கல்விக்கு நடை தவழும் படியாக விளங்கும் உயர்தர வகுப்பில் சேரமுடியாது. இதனால் பலர் கல்வியை நிறுத்தி பாடசாலை செல்லாதவர்கள் (Drop Outs) பட்டியலில் சேர்கிறார்கள்.

இந்த வகையைச் சார்ந்தவர்கள் தங்கள் ஆற்றல்களை வளர்த்து, வாழ்க்கை ஜீவனோபாயத்துக்கு ஒரு தொழிலைப் பயில்வதற்கான வசதிகள் மிகக் குறைவு. இந்தப் பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

இத்தகைய மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியை புகட்டவும், திறந்த பாடசாலைகளை ஆரம்பிக்கவும் திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. அது செயல்வடிவம் பெற்றுப் பயன் தருவதற்கு பல வருடங்கள் உருண்டோடிவிடும்.

க.பொ த ப. உயர் தரத்தில் பயின்று பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாமல் விடுபடும் மாணவர்களின் பிரச்சினை இன்னொரு வகை.

திறமை இருந்தும் தரப்படுத்தல், வெட்டுப்புள்ளி முறைகளால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் விரக்தி அடைவோர் மற்றொரு வகை. இவர்கள் தங்களுக்கு ஆர்வமும், ஆற்றலும் திறமையும், உள்ள தொழில் துறைகளையோ, தொழிற் பயிற்சியையோ பெறமுடியாமல் திண்டாடுவது இன்னொரு பிரச்சினை.

இந்தப் பிரச்சினைகள் ஏற்கனவே இனங்காணப்பட்டவை. இவற்றைத் தீர்ப்பதற்கு பல ஆலோசனைகள், திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் எதுவும் பெரியளவில் நல்ல விளைவைத் தரவில்லை.

பேராசிரியர் மகேஸ்வரன் வெளியிட்ட புதிய தகவல் — பிரச்சினை — ஏற்கனவே உள்ள கல்விப் பிரச்சினைகளில் பத்தோடு பதினொன்றாகச் சேர்ந்திருக்கிறது.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவானவுடனேயே மாணவர்களுக்குரிய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு வகை செய்வதா? அல்லது அவர்கள் காத்துக்கொண்டிருக்கும் இரண்டு மூன்று வருட கால இடைவெளியில் புத்தாக்க வகுப்புகளை நடத்தி மாணவர்களின் கல்விச் சோர்வை அகற்றுவதா? அல்லது அவர்களுக்குப் பயன்தரக்கூடிய வகையில் துறைசார் தொழிற் பயிற்சிகளை வழங்குவதா? இது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

# முறிந்த பேச்சுவார்த்தையை மீண்டும் நடத்த விரும்புவதாக அரசு கூறுவது சாத்தியமானதா?

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமும் முறிந்து ஐந்து நாள்கள் கடந்துவிட்டன.

இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு யார் காரணம் என்ற கேள்வி இயல்பாகவே எழும். அரசாங்கம் பேச்சுவார்த்தை விவகாரத்தைக் கையாண்ட விதமே இந்த முறிவுக்குக் காரணம் என்பதனை தெற்கில் உள்ள அரசியல் விமர்சகர்களும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

பேச்சுவார்த்தை, மோதல் தவிர்ப்பு முறிவதற்கு விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றஞ்சாட்டுக்கள் நியாயமானவை என்பதனை ரூபவாஹினி, வானொலிக் கலந்துரையாடல்களில் கூட வெளிப்படையாக சில விமர்சகர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை முறையாகப் புரிந்து கொள்ளவில்லை என்றும், பேச்சுவார்த்தைக்குத் தேவையான நிபுணத்துவம் [Negotiating Skills] அரசிடம் இருக்கவில்லை என்றும் தெற்கின் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்ததற்கும், மோதல் தவிர்ப்பு உடைந்ததற்கும் விடுதலைப் புலிகள் மீதே அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகிறது.

தனது தவறுகளையும், அசமந்தப் போக்கையும், அதிகாரத் தனத்தையும் மறைத்து வேளைக்கு வேளை வெவ்வேறு காரணங்களைக் கூறி சமாதானச் சூழ்நிலை குழம்புவதற்கு, விடுதலைப் புலிகளே காரணம் என்று அது கூறுகிறது.

அரசாங்கம் கூறுவது வேத வாக்கு என்று நம்பி, அதன் பிரகாரம் கருத்துக் கூறும் வழமையான நடைமுறையைப் பின்பற்றி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பன விடுதலைப் புலிகளைக் கண்டிக்கும் தொனியில் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

இவற்றைப் பின்பற்றி, அவுஸ்திரேலியா, ஜப்பான் கனடா ஆகிய நாடுகளும் ஸ்கண்டிநேவியன் நாடுகளும் சமாதானப் பேச்சுக்கள் முறிந்ததற்கும், மோதல் தவிர்ப்பு உடைந்தற்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்ற வகையில் கருதி கண்டன அறிக்கைகளை விரைவில் வெளியிடலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

### நிர்ப்பந்தம்

பேச்சுவார்த்தையிலிருந்தும், மோதல் தவிர்ப்பிலிருந்தும் விடுதலைப்புலிகள் விலகுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதே உண்மை. இதனை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் இம்மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுதிய கடிதத்தில் மிகத்தெளிவாக எடுத்துக்கூறியிருந்தார்.

தமது அரசியல் உரிமைகள் கிடைக்காத நிலையில், தமிழர்கள் எவ்வாறு ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்களோ, அது போலவே விடுதலைப் புலிகளும் பேச்சிலிருந்து விலகிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தையை கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பித்த போது அரசாங்கம் கொண்டிருந்த நிலைப்பாடும், அணுகுமுறையும் திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பெரிதும் மாறின.

தாம் இருபது லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவானது இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு, அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற ஆணையுடனேயே என்பதனை சந்திரிகா மறக்க முற்பட்டதே சமாதான சூழ்நிலை கெட்டுப்போவதற்கு அடிப்படைக் காரணமாகும்.

பேச்சுவார்த்தையை நடத்துவது, அது வெற்றி அளிக்கவில்லையெனில் இராணுவத் தீர்வை நாடுவது என்ற நோக்கம் சந்திரிகாவிடம் குடிகொண்டது. பிரதமராக இருந்த போது, இராணுவம் சொல்வது போல அரசாங்கம் நடந்து கொள்ள முடியாது என்று பி. பி. ஸிக்கு செவ்வி வழங்கிய அதே சந்திரிகா, ஜனாதிபதியானதும், இராணுவத்திற்குச் சார்பாகப் பேசத்தொடங்கினார். படை அதிகாரிகளின் ஆலோசனைகளை அதிக அளவில் உள்வாங்கிக் கொண்டு சிரமிக்கவும் செய்தார்.

### நம்பிக்கை தேய்ந்தது

இந்த அடிப்படை மாற்றமே தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர் காட்டிய அசமந்தத்துக்குக் காரணம். இராணுவ நலன்களுக்கு முன்னுரிமை வழங்கியது. அவற்றை விட்டுக் கொடுப்பது 'தேசிய' பந்தோபஸ்துக்குக் குந்தகமாக அமையும் என்று காண உத்தியே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. காலதாமதம் என்பதன் சரியான வியாக்கியானம், அரசு தன்னை இராணுவத் தீர்வுக்கும் தயார்ப்படுத்திக் கொள்கிறது என்பதேயாகும்!

இதனை ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் தாம் வழங்கிய பத்திரிகைச் செவ்விகளிலும், இராணுவத்தினர் மத்தியில் ஆற்றிய உரைகளிலும் சில வேளைகளில் நேரடியாகவும், சில வேளைகளில் மறைபொருளிலும் கூறியது கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய ஒரு நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கும் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பன மீது நம்பிக்கை குறையத் தொடங்கியது.

வடபகுதித் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் பேச்சுவார்த்துப் பிரச்சினை மிகவும் முதன்மையானதாகும். ஆனால் அரசாங்கம் அது குறித்துப் போதிய கவனம் செலுத்தவில்லை.

பேச்சுவார்த்தை தொடங்கியதிலிருந்து, ஆகக் குறைந்தது நான்கு மாதங்களாக இந்தப் பிரச்சினை, பிரச்சினையாகவே இருந்து வருகிறது! நடைமுறைகள், கடந்த கால வரலாறு என்பன பற்றிய போதிய அவதானிப்பும் புரிந்துணர்வும் அரசாங்கத் தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்களிடம் இருக்கவில்லை—

இதுவும் புலிகளை இப்போதைய முடிவுக்குத் தள்ளுவதற்கு ஒரு காரணம் – என்று தென்னிலங்கை அரசியல் அவதானி ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கிறார். அவர் கூறுவதும் உண்மையே.

மேலும், அருட்கலாநிதி வண. இம்மனுவேல் அடிகளார் கூறியது போன்று, செயற்படுத்தப்படாத பேச்சுக்களில் தொடர்ந்து ஈடுபடுவது அர்த்தமற்றது. பேச்சைச் செயற்படுத்துவது என்ற நிலை இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமே இல்லை — என்ற முடிவு தானே மிஞ்சும்?

முதலாவது, இரண்டாவது பேச்சுக்களில் ஒத்துக்கொள்ளப்பட்டவையும், கொழும்பில் முடிவு செய்யப்பட்ட போது ஒத்துக்கொள்ளப்பட்டவையும் கூட, செயற்படுத்தப்படவில்லை. அதனால் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைந்தது! ஏமாந்துவிடுவோமா என்ற ஏக்கம் பரவியது.

### ஏமாற்றமும் ஏக்கமும்

அந்த ஏமாற்றமும், ஏக்கமும் பேச்சுவார்த்தை முறிவுக்கும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்த உடைவுக்கும் பிரதான காரணங்கள் என்பதனை அரசு இப்போதாவது உணருமா என்பது சந்தேகம் தான்.

கிடைத்த சந்தர்ப்பத்தை கைநழுவவிட்டு விட்டு, விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசு விரும்புவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அது எப்படிச் சாத்தியமாகும்?

பேச்சுவார்த்தையில் இருந்தும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தும் விலகிக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்ததற்குப் பதிலடி என்ற தோரணையில் –

★ நீக்கப்பட்ட பொருளாதாரத் தடையை அரசு அமுலுக்கு கொண்டு வந்தது.

★ மீன்பிடித் தொழிலுக்கு பூரண தடை கொண்டு வந்தது.

★ கிளாலிப் பாதையூடாக மக்கள் பயணம் செய்யக் கூடாது என்றும் உத்தரவு.

...கப்பட்டு விட்டதான செய்தி வெளியாகக் கூடும்!

அரசாங்கத்தின் போக்கு வேளைக்கு வேளை இவ்வாறு தீவிரமாக இறுகிக் கொள்ளும் போது, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முயற்சி செய்வதாகக் கூறுவது வெறும் ஏமாற்று வேலையும் போலித்தனமுமே ஆகும்!

அரசாங்கமும், படைகளும் விஜேதுங்கா காலத்துக்கு திரும்பிவிட்ட பின்னர், பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட பின்னர், மீண்டும் பேச்சு வார்த்தை என்பது வேடிக்கை மிகுந்ததாகும்!

சர்வதேச அபிப்பிராயத்தை தனது பக்கம் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சி இது.

யுத்தத்தின் மத்தியிலும் பேச்சு வார்த்தை நடத்தப்படுவது சாத்தியம் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. அதற்கு தென் ஆபிரிக்கா பலஸ்தீனம், வட அயர்லாந்துப் பிரச்சினைகளைச் சிலர் எடுத்துக் காட்டுகிறார்கள்.

பிந்தி வந்த செய்திகளின் படி அவற்றைப் பின்பற்ற சந்திரிகா விரும்பவில்லை என்றே தெரிகின்றது. வெள்ளிக்கிழமை மாத்தறையில் ஒரு வைபவத்தில் பேசிய ஜனாதிபதி—

விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அரசாங்கம் சமாதானத்தை நிலை நாட்டியே தீரும் என்று அகங்காரம் ததும்ப கூறியிருக்கிறார்!

இது ஏற்கனவே நடந்து மறந்த நிலையில், விஜேதுங்கா கையாண்ட பாணியில் வந்திருக்கும் பேச்சு.

விடுதலைப் புலிகளுடன் பேச முயற்சிப்பது என்ற நிலையிலிருந்து இரண்டு நாள்களில் மாறிவிட்டார் சந்திரிகா!

சந்திரிகாவின் இத்தகைய சணம் பித்தம் சணம் வாதம் என்ற — Blow Hot, Blow cold—நிலை ஒரு போதும் சமாதானத்தை உருவாக்காது.

பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல, இப்போது விஜேதுங்கா காலத்துக்கே நிலைமை திரும்பி இருக்கிறது.

சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்காது சலுகைகளை மட்டுமே கொடுக்க விரும்புகிறார்கள் என்பது இதிலிருந்து வர்ஜிதமாகிறது. சிங்களத்தலைவர்கள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கமாட்டார்கள்; நாடு பிளவுபடுவதுதான் கடைசி முடிவாக இருக்கும் என்பதனை இது முன்னுரைக்கிறதா? ★

## அரசியல்

## அரசின் கடந்த நான்கு நாள் நடவடிக்கைகள் சாதகமாக இல்லை

## தமிழர்களின் நம்பிக்கை தேய்ந்து போய்விட்டது

மிக இலகுவாகப் புலப்படக் கூடிய அளவுக்கு வெளிப்படும்.

விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் பேச்சு வார்த்தையின் மீது, அரசியல் தீர்வின் மீது, நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததே. ஒக்ரோபர் 13 ஆம் திகதி நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது (அப்போது சந்திரிகா பிரதமராக இருந்தார்) முகிழ்த்த அற்ப சொற்ப நம்பிக்கையும், ஏன் நான்கு மாதங்களுக்குப் பின்னர் கூட, ஜனாதிபதியின் பிந்திய கடிதத்தில், பூநகரி குறித்து மூன்று மாதங்களின் பின்னர், அல்லது அரசியல் விவகாரம் பேசப்படும் போது கலந்தாலோசிக்கலாம் என்று கூறப்பட்டது!

### நம்பிக்கை வருவது எப்படி?

அரசாங்கம் கூறுவது போல பூநகரி இராணுவ முகாமை 500 மீற்றர்கள் உள்ளே நகர்த்...

## விஜேதுங்காவின் காலத்துக்கு அரசியல் நிலைமை திரும்பிவிட்டது

தேய்ந்து போகும் விதத்திலேயே அரசின் அதற்குப் பிந்திய சகல நடவடிக்கைகளும் அமைந்திருந்தன!

பேச்சுவார்த்தை என்பது பேச்சுக்குத்தான்; நோக்கமும் செயற்பாடும் இராணுவத் தீர்வுக்கான உள்நோக்கம் கொண்டவை என்று விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் சந்தேகப்படும் அளவுக்கே அரசின் சகல நடவடிக்கைகளும் அமைந்திருந்தன.

பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டவர்கள், மிகச் சிறிய விடயத்தில் கூட முடிவு எடுக்க முடியாதவர்கள். கப்பல் பார்த்த சேவகர்கள் போல ஒவ்வொன்றுக்கும் கொழும்பில் போய் ''அம்மா''வுடன் ஆலோசித்து முடிவு அறிவிக்கிறோம் என்ற பேர்வழிகளாகவே அவர்கள் இருந்தனர்.

கடைசியாக நடந்த நான்காம் கட்டப் பேச்சுக்களுக்கேனும் முடிவு எடுக்கக் கூடிய தரத்தில் உள்ளவர்களை அனுப்புமாறு தலைவர் பிரபாகரன் தமது கடிதத்தில் ஆலோசனை தெரிவித்திருந்தும் அரசு அதில் அக்கறை செலுத்தவில்லை.

### காலதாமதம் செய்யும் உத்தி

இத்தகைய போக்கானது, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில், அந்தத் தீர்வுகளைச் செயற்படுத்துவதில் காலதாமதம் செய்வதற்கினாலும், இராணுவம் துன்புறுத்தும் என்ற அச்சத்தினால் அதனூடாகப் பயணம் செய்வதற்குத் தமிழ் மக்கள் முன்வரமாட்டார்கள் என்பதனை —

ஜனாதிபதியைச் சந்தித்த, பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர்கள் மிகத்தெளிவாக நேரில் எடுத்துக் கூறியிருந்தனர்.

அதன் பின்னரும் பூநகரி விவகாரத்தை மூன்று மாதங்களின் பிற்பாடு. ஆராய்வோம் என்று சந்திரிகா கடிதம் எழுதுகின்றார் என்றால், தமிழ் மக்களின் நலனில் அவருக்கு அக்கறை உண்டு என்று தமிழர்கள் எப்படி நம்புவது? பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, சமாதானம் சாதகமாகும் என்ற நம்பிக்கை அவர்களிடம் வளர்வது எவ்வாறு?

விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பு. அதே சமயம் தமது கோரிக்கைகளில் விடாப்பிடியாக நிற்கக் கூடியவர்கள். அவர்களை ஏமாற்றுவது கஷ்டம். இதனை அரசாங்கம் உணரத் தவறி விட்டது —

மறுபக்கத்திலே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது, அந்த அமைப்பின் தன்மை அதன் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களுக்குத் தான் ஏதோ பெரிதாகச் செய்துவிட்டதாகக் காட்டிக் கொண்ட சிறு சில உரிமைகளைக் கூட அரசு மீண்டும் பறித்துக் கொண்டிருக்கிறது.

புலிகளைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு மக்கள் மீது முந்திய அரசு சுமத்திய அதே கஷ்டங்களைத் தானும் சுமத்த முனைந்திருக்கிறது சந்திரிகா அரசு.

இதனை எந்த வகை நல்லெண்ணத்தில் சேர்ப்பது? செயலளவில் பழிக்குப் பழி [Tit for tat] வாங்கும் நோக்குடன் நடந்து கொண்டு, விடுதலைப் புலிகளை மீண் பேச்சுக்கு அழைக்கப் போகிறோம் என்பதனை விட பெரிய வினோதம் வேறு எதுவும் இருக்க முடியாது

### அடிக்கடி மாறுகிறது

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டதாக அறிவித்த பின்னர், விடுதலைப் புலிகளே முதலில் தாக்குதலை நடத்தியிருந்தாலும் கூட —

அதற்குப் பதிலடியாக, தாக்குதல் நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அரச தரப்பில் புதன்கிழமை தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வெள்ளிக்கிழமை தனது நிலைப்பாட்டை அரசு மாற்றியது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் படையினர் தாக்கலாம் என்று அனுமதி வழங்கப்பட்டது.

இப்பத்தியை வாசிக்கும் போது, தமிழ் மக்களை புலிகளின் முகாம்களுக்கு அருகில் குடியிருக்க வேண்டாம் என்ற அறிவித்தலுடன் படையினருக்கு முழு அளவில் தாக்குதல் நடத்த அனுமதி வழங்...

- உதயகாந்தன் -

## புலிகளின் குரல் வானொலியில்

**23 — 04 — 1995**

**ஞாயிறு இரவு**

★ 8-02 — 1995-4-19 அதிகாலை வேளை திருமலைத் துறைமுகத்தில் கடற் கரும்புலிகள் நடத்திய போர்க் கப்பல்கள் தகர்ப்பின் வீர சாதனையையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — கருணை ரவி எழுதும் ''காணி நிலம் வேண்டும்'' அங்கம் -08

**24 — 04 — 1995**

**திங்கள் காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**

**ஞாயிறு மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு

## தமிழ் இசை உரை அரங்கில்

யாழ்ப்பாணம், ஏப். 23

சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான உற்சவத்தை ஒட்டி அகில இலங்கை திருமுறை மன்ற அனுசரணையுடன் நடைபெற்று வரும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை 6ஆம் திருமுறை இடம்பெறும்.

இசையாளராக வீ. கே. நடராஜாவும் உரையாளராக திரு. நா. இராசையாவும் கலந்து கொள்வர். (ஓ-14)

## மெய்வல்லுநர் போட்டி

வலி தெற்கு ஏப்ரல் 23

சுந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலையில் இயங்கும் கண்ணன் சிறுவர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி சுந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும்.

திரு. சி. கருணாநிதி தலைமையில் நடைபெறும் இப் போட்டியில் சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## பட்டமளித்து கௌரவம்

கொழும்பு, ஏப் 23

சிவநெறிச் செம்மல் இரா. சத்தியவானுக்கு ''அருள் இசைக் காவலன்'' என்னும் பட்டத்தை முன்னாள் இந்து கலாசார அமைச்சர் பி. பி. தேவராஜ் அண்மையில் வழங்கிக் கௌரவித்தார்.

வட - கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் இரா. சத்தியவான் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவர் மேற்படி சங்கத்தினால் நடத்தப்படும் இந்து அறநெறிப் பாடசாலை பிரதம அதிபராகப் பணிபுரிந்து வருகிறார்.

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுவயதிலேயே யோகர் சுவாமிகளின் அன்புக்கு ஆளானவர். (ஆ)

## 'ஆசிரியம்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 23

'ஆசிரியம்' மலர் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை ... கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவக செயல் திட்ட அதிகாரி திரு. மு. தங்கவேல், வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், அருட்திரு பிரான்சிஸ் யோசவ் அடிகளார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

மலர் வெளியீட்டு உரையை திரு. கு. சண்முகநாதனும், விமர்சன உரையை கலாநிதி சபா ஜெயராசாவும் வழங்குவார்.

நூலாசிரியர் திரு. பெ. பிரான்சிஸ் பதிலுரை நிகழ்த்துவார். (ஓ-14)

## மந்துவிலில் இலவச வைத்திய சேவை

தென்மராட்சி, ஏப். 23

சாவகச்சேரி பகவான் சத்திய சாயிபாபா சேவா நிலையத்தினர் மந்துவில் கிராமத்தில் உள்ள மக்களுக்கு இலவச வைத்திய சேவையினையும் வைத்திய பரிசோதனையையும் இன்று ஞாயிறு தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தவுள்ளனர்.

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு மந்துவில் வடக்கு, தாவளை இயற்றாலை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றில் இவ் வைத்திய சிகிச்சையினை யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மூலம் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சித்திரவடிவேலு பரமநாதன்

தொண்டமானாற்றைச் சேர்ந்தவரும், மலேசியாவை வதிவிடமாகக் கொண்டவருமான சித்திரவடிவேலு பரமநாதன் 13-4-95 இல் மலேசியாவில் அகால மரணமானார். ஈமக்கிரியைகள் மலேசியாவில் நடைபெற்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்
ஸ்ரீரஞ்சன்

(36384)

## திருமதி சிவகாமி இளங்கோ

சிரணிச்சந்தி சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவகுருநாதன் - பத்மசுந்தரி தம்பதிகளின் மகளும், சங்கானை சபாரத்தினம் தம்பதிகளின் மருமகளுமான திருமதி சிவகாமி இளங்கோ (சோபி) சுவிஸில் அகால மரணமானார்.

இவர் இளங்கோவின் (சுவிஸ்) அன்பு மனைவியும், பிரசன்னா, சாரங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரிகா (சுவிஸ்), சக்திவேல் (ஓமான்), பவதாரணி (ஜேர்மனி), ரவிசங்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜமோகன் (சுவிஸ்), திலீப்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் திரு திருமதி சோமசுந்தரத்தின் பேர்த்தியும் ஆவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும் படி கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்
இ. சிவகுருநாதன்
[தந்தை]

[36386]

## முருகேசு கனகரத்தினம

வாரிவளவு காரைநகரைச் சேர்ந்த முருகேசு கனகரத்தினம் நேற்று (22-4-95) சனிக்கிழமை காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற முருகேசு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரவேலு- பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவனும, நல்லம்மாவின் அன்புச் சகோதரனும், மதிவதனபூசனி, விக்னேஸ்வரன் (உரிமையாளர் தர்மலிங்கம் அன் கோ, பதுளை), ராமராவ் (உரிமையாளர் சதன் ரேடர்ஸ் பதுளை), சறோஜா ஜெயராணி, கணேசமூர்த்தி (உரிமையாளர் தர்மலிங்கம் அன்கோ. பதுளை), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் செல்வதி. சிவகுருநாதன் (உரிமையாளர், V. M. சண்முகம் அன் பிறதர்ஸ் யாழ்.), சிவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசரத்தினம், மற்றும் தர்மலிங்கம் (உரிமையாளர் அடைவு கடை, யாழ்) விசயரத்தினம் (உரிமையாளர் ரட்ணம் பார்மசி அன் குறோசறி யாழ்), தையல்முத்து, கமலாதேவி ஆகியோரின் அன்புமைத்துனரும், பவானி, திருக்குமார், ரோகினிதேவி, கயசரன், கார்த்தீபன், காயத்திரி, சாஸ்த்தன், பாரதி, சஜனன், ஸ்ரீபாலக்குமரன், சஜமுகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரது தகனக் கிரியைகள் இன்று 23-4-95 9 மணிககு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. கணேசமூர்த்தி
(மகன்)

இல. 95, 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்

(36382)

## அந்தோனிப்பிள்ளை எட்மன
### (ஜெயா)

யாழ்ப்பாணம் இல 143/1, ஸ்ரான்லி வீதியில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை திரேசம்மாவின் அன்பு மகன் எட்மன் (ஜெயா) பிரான்சில் அகால மரணமானார்.

இவர் றெக்ஸ் மகேந்திரன் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் - கொழும்பு), மேசி (வவி - அவுஸ்திரேலியா, மனோகரன் (வின்சன் டியூக் பிரான்ஸ்), செலவி எமிலி (சாந்தா), ரஞ்சன் அஞ்சலோ (பிரான்ஸ்), ஸ்ரீபன் (ராஜன், பிரான்ஸ்); நிக்சன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ருக்மங்காதேவி (வட்டுக்கோட்டை), சில்வெஸ்ரர் (அவுஸ்திரேலியா), திருமதி ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், றொசானி, கரிந்திரன், தீபிக்கா, குனோடினா ஜக்குலின் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 24-04-95 (திங்கட்கிழமை) பிரான்சில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இரங்கல் திருப்பலி யாழ் புனித யுவானியார் ஆலயத்தில் 24-04-95 ஆம் திகதி (நாளை) பிற்பகல் 4 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருபலியில் அனைவரும் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை
[சகோ]

[36383]

### திருமதி
## சௌந்தரநாயகி பேரம்பலம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 99, சாந்த பெனடிற் மாவத்த கொழும்பு 13 இல் வசித்தவருமாகிய சௌந்தரநாயகி பேரம்பலம் 17 4 95 ஆம் திகதி காலமானார்

இவர் S A பேரம்பலம் (L P T. கொழும்பு), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவம்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகளும, பேரின்பாநிதி (நோர்வே), பேரின்பவேள் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் அன்பு மாமியும், அஜினி, யமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஸ்வலிங்கம், சுந்தரம்பிள்ளை, குலசேகரம், இராசதுரை, அன்னலெட்சுமி காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சபாரெத்தினம, கமலாம்பிகை, சாந்தலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும, Dr. சுப்பிரமணியம் (U K ), நகுலாம்பிகை, சுந்தரம்மா காலஞ்சென்றவர்களான Dr. நாகநாதன், நடராசா, மயில்வாகனம, நவரெத்தினம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சின்னம்மா (U K.), பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான திருமதி நாகநாதன், திருமதி நடராசா, குருசாமி, தர்மலிங்கம் ஆகியோரின் சகலியும், யூடீஸ் சுப்பிரமணியம் தம்பதிகளின் சம்பந்தியும் ஆவர்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 4.95 சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்

தகவல்:
பா. தங்கவேல்
(மருமகன்)

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[36385]

# வடமராட்சி கிழக்கில் கரும்புலிகளின் உருவப்பட ஊர்தி பவனி நாளை

யாழ்ப்பாணம், ஏப். 23

கடந்த புதன்கிழமை திருகோணமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி கடற்படைக்கு சொந்தமான இரு பீரங்கி கப்பல்களை தகர்த்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற் கரும்புலிகள் மேஜர் மதுஷா, மேஜர் தணிகைமாறன், மேஜர் கதிரவன், கப்டன் சாந்தா ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் உருவப்பட ஊர்தி, நாளை திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கில் பவனி வரவுள்ளது.

உருவப்பட ஊர்தி காலை 8.00 மணிக்கு உடுத்துறை பாரதி சனசமூக நிலையத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற பின்னர் கடற்கரை வீதி வழியாக 10.00 மணிக்கு— தனிப்பனை முகாமை சென்றடையும் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும், பின்னர் ஊர்தி கடற்கரை வீதி வழியாக 11.00 மணிக்கு கொடுக்குளாய் முகாமை அடைந்ததும் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்

இதனைத் தொடர்ந்து ஊர்தி கடற்கரை வீதி வழியாக நாகர்கோவில் ஊடாக 12.30 மணிக்கு குடத்தனை வடக்கைச் சென்றடையும் அங்கும் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்

தொடர்ந்து பிரதான வீதி வழியாக மணற்காட்டை அடைந்ததும் பி.பகல் 2.30 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும், இக் கூட்டம் முடிவுற்றதும் பிரதான வீதி வழியாக ஊர்தி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வந்தடையும்.

(ஒ)

### ஆலயங்களில்

ஆலங்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய புதிய சித்திரமணித் தேர் வெள்ளோட்ட விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்

தொடர்ந்து தேரினை நிர்மாணித்த சிற்ப ஜோதி தேவரத சிற்பமணி பொன்னாடை போர்த்தி மலர்க்கிரீடம் சூட்டி கௌரவிக்கப்படுவார். (இ-14)

### இரத்தம் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு 'பி' நெகடிவ், 'ஓ' நெகடிவ் ரக குருதி வகைகள் அவசரமாகத் தேவைபடுவதாக அறிவிக்கப்படுகிறது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் நோயாளர் நலன்புரி சங்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது [ஐ]

### தடகள விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

நல்லூர் பிரதேசச் செயலக பிரிவைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசச் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (ஐ)

### அதிபர்களுக்கு கூட்டம

யாழ்ப்பாணம், ஏப் 23

பாடசாலை அதிபர்களுக்கான கோட்ட ரீதியான கூட்டங்கள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

வேலணை, ஊர்காவற்றுறை: கோட்ட அதிபர்களுக்கு முற்பகல் 9 மணிக்கு யாழ். சென் அன்ரனீஸ் பாடசாலையிலும் —

உடுவில, தெல்லிப்பளை கோட்ட அதிபர்களுக்கு முற்பகல் 11 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும்—

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு யாழ் கல்வித் திணைக்கள மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. [ஐ]

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 23

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே எவி. எவி கிண்ணத்துக்காக — கொககுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில — நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ காலை 8.30 மணி — மானிப்பாய், பரிஸ் வி. க அணி எதிர் சென்றலைட்ஸ் நீல அணி.

★ பிற்பகல் 1 மணி — ஜெ விஸ்ரார் அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி. [ஐ-20]

★ ★ ★

சுழிபுரம் சததியா விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி அருணோதய [illegible] மைதானத்தில் நடைபெறவுள்ளன. [ஐ-20]

## முஸ்லிம் பணிப் பெண்ணின் சடலம்:
# ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அடக்கம் செய்ய ஏற்பாடு

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் பெண்ணின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப் படமாட்டாது.

சித்தி யுலைசா பாருக் என்ற இந்தப் பெண்ணின் குடும்பத்தவர்கள் சடலத்தை இங்கு கொண்டு வர வேண்டாம் எனவும் அங்கேயே அதனை அடக்கம் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

தாம் வேலைக்கு இருந்த வீட்டில் நான்கு வயதுச் சிறுமி ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (இ-14)

# தற்கொலைப் படையினர் மூவர் கொழும்பில் கைதாம்!

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவைச் சேர்ந்த மூவரை கொழும்பில் பொலீஸார் கைது செய்திருப்பதாக நேற்றைய 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கிடையில் -

கடந்த புதனன்று மட்டக்களப்பு மாவட்டம் முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் படையினர் கைது செய்ய முயன்றவேளை 'சயனைட்' அருந்தியதாகக் கூறப்பட்ட இளைஞர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் அங்கிருந்து தப்பிச்சென்று விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஐ-5]

# சமாதான முயற்சிகள் மீண்டும் தொடர வேண்டும்
## தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஏப் 23

"அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்த்து, மீண்டும் இருசாராரும் தொடர்பு கொண்டும், சமாதான முயற்சியை தொடர வேண்டும.

இவ்வாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றினைக் காண்பது சம்பந்தமான முயற்சிகள் தொடரப் படவேண்டும் என்று சிறுபான்மை இனக் கட்சிகள் மட்டுமன்றி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளும் வலியுறுத்தி உள்ளன.

அதே சமயம் கத்தோலிக்க கிறீஸ்தவ மதத்தலைவர்களும. மற்றும் பொது தொண்டர் ஸ்தாபனங்களும் கூட இப்பிரச்சினை தொடர்பாக இருசாராருக்கும் இடையில் தொடர்பு ஒன்றினை ஏற்படுத்த முயன்று வருவதாக கொழும்பு நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சமாதான முயற்சியில் பின்வாங்கக் கூடாது
## வாசுதேவ கோரிக்கை

கொழும்பு, ஏப். 23

சமாதான முயற்சியில் அரசு பின்வாங்கக் கூடாது புலிகளும் மீண்டும் பேச்சுக்கு முன்வர வேண்டும் என்று இரத்தினபுரி மாவட்ட எம்.பி வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவு உள்ளது அரசு எவ்வாறான சவால்கள் நேர்ந்தாலும் சமாதான முயற்சியில் எடுத்து வைத்த காலை பின்வைக்காமல் நம்பிக்கையுடன் அந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்.

இன்னும் கால அவகாசம் இருக்கின்றது. அதற்காக அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-14)

### 2 கடற்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மிகுந்த உணர்வுபூர்வமாக தமது அஞ்சலியைச் செலுத்தினர் தொடர்ந்து இறுதி மரியாதைக் கூட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, அரசியல்துறையைச் சேர்ந்த திரு. கவியழகன் ஆகியோர் அங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வுகளின் இறுதியாக கப்டன் சாந்தாவின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நடுகை செய்யப்பட்டது.

மேஜர் தணிகைமாறனின் உருவப்படம் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது.

மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நடுகை செய்யப்பட்டது. [ஐ-20]

### மே நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

மேதின முன்னேற்பாடுகள் தொடர்பாக தொழிலாளர் அமைப்புகளுடனான கலந்துரையாடல்கள் கடந்த 20 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

அந்த வரிசையில் வலி. கிழக்கு வெகுஜன அமைப்புகள் கடற்புலிகள் பிரிவினருக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு குருநகர் வட்டச் செயலகத்திலும்.—

வலிகாமம் பகுதி சனசமூக நிலையங்கள், விளையாட்டு கழகங்கள், மாதர் அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்திலும்.—

மானிப்பாய் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 30 மணிக்கு ப. தெ. அ. கூ. சங்க மானிப்பாய் பணிமனையிலும் நடைபெறவுள்ளன. [ஐ]

## சாவகச்சேரி, மீசாலை பகுதிகளில்
# பாவனைக் காலம முடிந்த பால்மா, பிஸ்கட் விற்பனை
## திடீர் சோதனையில கண்டுபிடிப்பு

சாவகச்சேரி நகர சுகாதார பரிசோதகர் எஸ். கிளின்ரன் தலைமையிலான குழுவினர் சாவகச்சேரி நகர்ப்பகுதி, மற்றும் மீசாலைப் பகுதி விற்பனை நிலையங்களில் நேற்று திடீர் சோதனைகளை நடத்தினர்.

இதன்போது பாவனைக் காலம் முடிவடைந்த பொருள்கள் பல விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டு அவை கைப்பற்றப்பட்டன.

பிஸ்கட் வகைகள், தகரத்தில் அடைத்த பால், குழந்தைகளுக்கான பால்மா பக்கட்டுகள் என்பனவே இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஆகும்.

கைப்பற்றப்பட்ட மேற்படி பொருள்கள் அழிப்பதற்காக சாவகச்சேரி வைத்திய அதிகாரி பணிமனையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. (ஐ-31)

## கனடாவின் வழக்கறிஞர்



### ஸ்ரீதரன் தில்லைநாதன்
### பரிஸ்டரும், சொலிசிட்டரும்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கடந்த பத்து வருடங்களாக கனடாவில் வசித்து வருபவரும், இலங்கையில் சட்டத்தரணியாகக் கடமையாற்றியவருமான திரு. ஸ்ரீதரன் தில்லைநாதன் அவர்கள் கனடாவில் சட்டக்கல்லூரியில் கல்விகற்று சித்தி பெற்று. கடந்த மாசிமாதம் 16 ஆம் திகதி பரிஸ்டரும், சொலிசிட்டராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கனடாவில் பல்வேறு சமூகப்பணிகளில் முன்னின்று உழைத்துவந்த திரு. ஸ்ரீதரன், தமது சேவைக்காக ஒன்ராறியோ மாகாண அரசின் விருதினை மூன்றாண்டுகளுக்கு முன்னர் பெற்றுள்ளார். கடந்த மாசி மாதம் 16 ஆம் திகதி புதிய கனடிய வழக்கறிஞர்கள் பதவியேற்பு வைபவத்தின் போது சுமார் 400 பேர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். இவர்களுள் திரு ஸ்ரீதரன் மட்டுமே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் முடித்தபின்னர் சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்றார். கொழும்பில் பிரபல்யமான வழக்கறிஞராகவிருந்த திரு செ சிவராசா (தற்போது ஜனாதிபதி கவுன்ஸிலராகவுள்ளார்) அவர்களின் கீழ் சட்டத்தொழிலை மேற்கொண்டார். திரு. ஸ்ரீதரன் தமது பணியினை கனடாவில் ஆரம்பித்துள்ளார். இவர் சாவகச்சேரி தில்லைநாதன் தம்பதிகளின் மகன் ஆவார்.

இத்தகவல் கனடாவில் வெளிவரும் "தமிழர் தகவல்" பத்திரிகையில் வெளியாகி இருந்தது.

(சி/1072)

## O/L - 95 DAY CLASS

வாரத்தில் 6 நாட்கள்
காலை 8-00 — பி. ப. 1-00 வரை

★ தூர இட மாணவர் நலன் கருதி வகுப்புகள் பி. ப. 1-00 மணியுடன் நிறுத்தப்படுகின்றன.
★ நிறுவன மாணவர்களின் கடந்த கால பெறுபேறுகள் நிகழ் காலத்திற்கு சான்றாகும்.
★ அதே திறமையான ஆசிரியர் குழுவுடன் மேலும் சில சிறப்பு விரிவுரையாளர்கள்.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

மீண்டும் ஒரு பிரிவு
ஏப்ரல் 27இல்

(36384)

## முக்கிய அறிவித்தல்
## A/L 97 விலங்கியல்
### திரு. கெங்காதரன்

★ மேற்படி ஆசிரியரின் விலங்கியல் வகுப்புகள் யாவும் யாழ். நகரில் 'நியூ மாஸ்ரர் இன்ஸ்ரிரியூட்', 'யூனிவேர்சல்' ஆகிய இரண்டு கல்வி நிறுவனங்களில் மாத்திரமே நடைபெறும்.

உங்கள் அனுமதிகளை உடனடியாக உறுதி செய்து கொள்ளுங்கள்.

யூனிவேர்சல் — கந்தர்மடம், யாழ்ப்பாணம்
நியூ மாஸ்ரர் — இன்ஸ்ரிரியூட், யாழ்ப்பாணம்

(சி- 1070)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-04-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org